# அலகு 1 கவிதைச் சிமிழ்

**கால அளவு : 30 மணிநேரம்**

## அலகு அறிமுகம்

‘கலைகளின் அரசி கவிதை’என்பார் மேலை நாட்டறிஞர் தாமஸ் பிராட் (Poetry is the Queen of Arts - Thomas Sprat). உணர்வுகளின் பாய்ச்சலால் உந்தப்பட்டுப் பிறந்த கவிதையை இலக்கணக் கூட்டுக்குள் அடைத்ததால் அதன் வளர்ச்சி தடைபட்டது; வீச்சு, வேகம் குன்றியது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே இலக்கணச் சிறைகளை உடைத்துக்கொண்டு கவிதைப் பறவை சிறகு விரித்துப் பறந்தது. பழைய மரபை மீறிப் புறப்பட்ட ‘புதிய மக்களாட்சி முறையே புதுக்கவிதை!’ பிரான்சுநாட்டில் தோன்றிய புரட்சிக் கவிஞர்களான பியூடிலேர், ரிம்பர்டு, மல்லார்மே போன்றோரே புதுக் கவிதையின் பிதாமகன்கள் என்பர். அமெரிக் காவின் வால்ட் விட்மன், டி எஸ். எலியட் போன்றோர் புதுக்கவிதையைப் புதிய பாதைக்கு அழைத்துச் சென்றனர்.

இந்தியாவில் புதுக்கவிதைக்கு வழியமைத்துக் கொடுத்தவர் கவி இரவீந்திரநாத தாகூரே என்பர். நோபல் விருது பெற்ற அவருடைய “கீதாஞ்சலி” உரைவீச்சில் (Free Verse) அமைந்த புதுக்கவிதை களே! புதுக் கவிதையைத் தமிழில் வசனக் கவிதைகளாய் வடித்துத் தந்தவர் மகாகவி பாரதியார். பின்னர் ந. பிச்சமூர்த்தியின் கரங்களில் தவழ்ந்து வளர்ந்தது, இன்று பல்லாயிரக் கணக்கான கவிஞர்களையும் வாசகர்களையும் பெற்றுத் தமிழில் புதுக்கவிதையுலகம் தழைத்து வருகின்றது. படிமம், குறியீடு, பன்முக வாசிப்பு, தொனி, தொன்மம் எனப் பல்வேறு உத்திகளை உட்கொண்டு புதுக்கவிதை பீடு நடைபோடு கின்றது. எல்லோருக்கும் கவிதை எல்லோரும் கவிஞர்களே என்ற நோக்கம் நிறைவேறும் காலம் வெகுதொலைவில் இல்லை.

பாடநூலின் முதல் அலகாக ‘கவிதைச் சிமிழ்’ அமைந்து பாடநூலுக்கு அழகு சேர்க்கிறது. கவிதையில் தோய்ந்து கற்பனையில் ஆழ்ந்து இன்பம் துய்ப்பதுதான் வாழ்வின் இனிமையான அனுபவம்! அத்தகைய இனிய தருணங்களைப் பாடப் பகுதியில் வரும் புதுக்கவிதைகள் பகிர்ந்தளிக்கின்றன என்பதில் ஐயமில்லை. புதுக்கவிதைத் தோட்டத்தில் பூத்த அரிய சில கவிதைகளைத் திரட்டித் தந்துள்ளார்கள். அத்தனையும் முத்துக்கள்; தமிழன்னையின் சொத்துக்கள்.

வாழ்ந்தோம் வீழ்ந்தோம் என்றில்லாமல் “ஒரு விளக்கையாவது நீ ஏற்றிவிட்டுப் போக வேண்டாமா?” எனும் கருத்தினை வலியுறுத்தும் கவிக்கோ அப்துல் ரகுமானின் ‘மானுடம்’, “உயிரை உற்பத்தி செய்யும் உயிரியல் மர்மம்தேடி உழைக்கின்றோம்” என்று அறிவியலின் உச்சத் தை நோக்கிச் சிந்தனையைத் தூண்டும் பிச்சமூர்த்தியின் ‘அறிவு’ எனும் கவிதை, ‘தன்வீட்டில் கூடுகட்ட விடமாட்டேன்’ என்று சொல்லி, இயற்கையை மனிதன் முற்றிலுமாக அழித்துவருகிறான் என்பதைச் சொல்லாமல் சொல்லும் கவிஞர் ஞானக்கூத்தனின் ஆதங் கத்தை எடுத்துக்காட்டும் ‘குருவிக்கு வேண்டு கோள்’ என்ற கவிதையும், தமிழாக்கம் செய்யப் பட்டுள்ள ஜப்பானிய ‘ஹைகூ’ கவிதைகள் சிலவும் அடங்கியதே இக்கவிதைச் சிமிழ்!

இதனுள் அடங்கியிருக்கும் கவிதை முத்துகளைக் கற்பதன் வாயிலாக மாணவர்கள் இன்னின்ன கற்றல் அடைவுகளைப் பெறுவது உறுதி என்பதைத் திடப்படுத்தும் வண்ணம் ஆசிரியரின் செயல்பாடுகள் அமைதல் வேண்டும். அதற்கு இச்சிற்றேடு ஒரு கைத் தாங்காய் அமையுமென்பது நமது நம்பிக்கை. நம்பிக்கைதானே வாழ்க்கை!

இது ஒரு மந்திரச் சிமிழ் அல்ல; கவிதைச் சிமிழ்! பூதம் வரா; புதுக்கவிதைப் பூக்கள் வரும். மெல்லத் திறந்து நுகர்ந்து பார்க்கலாம், வாருங்கள்.

## கற்றல் அடைவுகள்

- கவிதைகளைத் திறனாய்வு செய்து குறிப்பு எழுதுகிறார்கள்
- படைப்புகளில் கையாளப்படும் உத்திகளை மதிப்பீடு செய்து கட்டுரை எழுதுகிறார்கள்.
- படிமம், குறியீடு, பன்முகப்பார்வை, தொன்மம் ஆகியவற்றை எடுத்துக்காட்டு களுடன் விளக்கி எழுதுகிறார்கள்.

## மதிப்புகளும் மனப்பாங்குகளும்

- இயற்கையை நேசித்தல்
- இயற்கையைப் பாதுகாத்தல் வேண்டும் என்ற மனநிலையைப் பெறுதல்
- இயற்கையைச் சுரண்டும் நோக்கிற்கு எதிரான மனநிலை
- இயற்கையைப் பற்றிய புரிதல்
- மாற்றுத்திறனாளி மாணவர்களை மதிக்கும் மனநிலை

## கற்றல் கருவிகள்

- பாடநூல்
- பல்வேறு கவிதைகள்
  மரபுக் கவிதை
  புதுக்கவிதை
- புதுக்கவிஞர்கள் பற்றிய குறிப்புகள்
- குறுந்தகடுகள்
  ஒலி ஊடகம்
  ஒளி ஊடகம்
- கவிஞர்கள் - படங்கள்

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடு/செயல்முறை/மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
| --- | --- | --- |
| • கவிதை மனித உணர்வுகளின் வெளிப்பாடாகும்/ | • பல்வேறு பாடல்களைத் தொகுத்தும் பாடப்பகுதியிலுள்ள பாடல்களைப் படித்தும் கலந்துரையாடுகிறார்கள். கவிதைகள் வெளிக்காட்டும் மனித உணர்வுகள் என்னென்ன?<br>• மாணவர்கள் மதிப்பீட்டுக் குறிப்புகளை உருவாக்கி மதிப்பிடுகிறார்கள்.<br>• மாணவர் பங்கேற்பு<br>• பேச்சுத்திறன் | கவிதைகள் வெளிப்படுத்தும் உணர்வுகளைக் குறிப்பாகத் தயாரிக்கிறார்கள்<br><br>கவிதை வேறுபாடு பற்றிய குறிப்பு தயாரிக்கிறார்கள் |
| • இரு வேறுபட்ட வடிவ அமைப்பைக் கொண்டவை மரபுக் கவிதைகளும், புதுக்க விதைகளும் | **குழுக்கலந்துரையாடல்**<br>• மாணவர்களைக் குழுவாகப் பிரித்துக் கலந்துரையாடல் நடத்தல்.<br>• மரபுக்கவிதை, புதுக்கவிதை<br>• புதுக்கவிதைக்கு இலக்கணமில்லை<br>• மரபுக்கவிதை ஓசைநயமுடையது<br>• மரபுக்கவிதை சொற்செறிவுடையது<br>• புதுக்கவிதை எளிய சொல்லாட்சி<br>• கருத்துகள் கலந்துரையாடலில் இடம் பெற வேண்டும்.<br>**மதிப்பீடு**<br>மாணவர்கள் குழுவாக மதிப்பீடு செய்கிறார்கள்<br>• வடிவம் • பாடுபொருள்<br>• நடைவேறுபாடு | கவிதைகள் வெளிப்படுத்தும் கருத்துகளைக் குறிப்பாக எழுதுகிறார்கள்.<br><br>கவிதைகளின் வகைகைள் பற்றிய குறிப்பு தயாரிக்கிறார்கள் |

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடு/செயல்முறை/மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| | மாணவர்களின் செயல்பாட்டையும் மதிப்பீட்டுக் குறிப்புகளையும் ஆசிரியர் மதிப்பிடுகிறார்.<br>• மாணவர் பங்களிப்பு<br>• பேச்சாற்றல்<br>• கருத்துக் கோவை<br>இக்கலந்துரையாடலின் அடிப்படையில் மாணவர்கள் புதுக்கவிதையின்தோற்றம், வடிவ வேறுபாடு, பாடு பொருள் குறித்து குறிப்புகள் தயாரிக்கிறார்கள்<br>**கட்டுரை எழுதுதல்**<br>கலந்துரையாடலில் தயாரித்த குறிப்புக்களின் அடிப்படையில் "புதுக்கவிதைகளின் தனித்தன்மைகள்" என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுகிறார்கள்.<br>மாணவர்கள் கட்டுரைகளை மேம்படுத்தி சுயமதிப்பீடு செய்கிறார்கள்.<br>மேம்படுத்திய கட்டுரையை ஆசிரியர் மதிப்பீடு செய்ய வேண்டும்.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>• முன்னுரை<br>• கருத்துக் கோவை<br>• மேற்கோள்கள்<br>• முடிவுரை<br>• கருத்துகள்<br>• சொல் பயன்பாடு<br>• மொழிநடை<br>**குழுக்கலந்துரையாடல்**<br>கீழ் வரும் வினாக்களின் வாயிலாகக் கலந்துரையாடல்<br>• படிமம் என்றால் என்ன?<br>• குறியீடு என்றால் என்ன? | புதுக் கவிதையின் வடிவம், தோற்றம் குறித்து குறிப்பு எழுதுகிறார்கள்<br><br>கவிதைகளின் தனித்தன்மைகள் குறித்து கட்டுரைகள் தயாரிக்கிறார்கள் |

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடு/செயல்முறை/மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| • கவிதைகள், உத்தி படிமம், குறியீடு உவமை, உருவகம் போன்ற கூறுகளால் ஆனவை. | இவ்வினாக்களின் அடிப்படையில் கலந்துரையாடுகிறார்கள், பாடப்பகுதியிலுள்ள பாடல்களையும் வாசிக்கிறார்கள்.<br>ஆசிரியர் படிமம், குறியீடு அடங்கிய பாடல்களையும் படிமம் குறியீடு குறித்த விளக்கங்களையும் அளித்து விளக்குகிறார்.<br>• உத்தி • படிமம் • குறியீடு<br>விளக்கமும் எடுத்துக் காட்டும்<br>இக்கலந்துரையாடலின் அடிப்படையில் படிமம், குறியீடு குறித்துக் குறிப்பு தயாரிக்கிறார்கள்.<br>ஆசிரியர் குறிப்புகளை மதிப்பீடு செய்கிறார் குறிப்பில் இடம் பெற வேண்டியவை.<br>படிமம் குறியீடு இவற்றை அடையாளங்காணல். | |
| • கவிதைகள் பல்வேறு வடிவம், சுவைகளால் ஆனவை | **கவிதை மொழிதல்**<br>பல்வேறு வடிவங்களிலும் சுவைகளிலும் அமைந்த கவிதை களைத் தொகுத்து வகுப்பில் கூறுகிறார்கள்.<br>• அச்சம் • வீரம்<br>• காதல் • கோபம்<br>**கலந்துரையாடல்**<br>சுவையான, குறிப்பிட்ட வடிவங்களில் அமைந்த பாடல்கள் குறித்துக் கலந்துரையாடிய பின் பாடல்களைத் தொகுக்கிறார் கள். தொகுத்த பாடல்களை இரு குழுக்களாகப் பிரிந்து பாடலைப் படிக்கிறார்கள். ஒரு குழு பாடும்போது அடுத்த குழு மதிப்பீடு செய்யவேண்டும். மதிப்பீட்டுக் குறிப்புகளை யும் மாணவர்களே உருவாக்க வேண்டும்.<br>மதிப்பீட்டுக்குறிப்புகள்<br>• ஓசை • நேரம் • சுவை<br>• உச்சரிப்பு • பாடல் தேர்வு | |

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடு/செயல்முறை/மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| • குறுகிய வடிவில் ஆழமான கருத்துகளை உணர்த்துவது ஐகூ கவிதையாகும் | மதிப்பீட்டு குறிப்புகள் மாணவர் மதிப்பீடு ஆசியவற்றை ஆசிரியர் திட்டக் குறிப்பேட்டில் குறிப்பிட வேண்டும்.<br>**ஆசிரியர் மதிப்பீடு**<br>கவிதை மொழிதலை நடத்தலை மதிப்பீடு செய்யும் இரு குழுக்களையும் ஆசிரியர் மதிப்பிடுதல் வேண்டும், அதோடு கீழ் வருவனவற்றையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.<br>• ஓசை • நேரம் • சுவை<br>• உச்சரிப்பு • பாடல் தேர்வு<br>**குழுவை மதிப்பிடுதல்**<br>• நேர்மை • நடுவுநிலைமை<br>• தலைமைப்பண்பு • பங்கேற்பு<br>மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு எளிமையான பாடல்களைக் கொடுத்து கவிதை மொழிதலின் இறுதியில் பாடச் செய்தல் வேண்டும். அறிக்கை வெளியிடுவதுடன் பத்திரிகைச் செய்தியும் தயாரிக்க வேண்டும்.<br>**கலந்துரையாடல்**<br>• தோற்றம் • ஐ கூ வடிவம்<br>• தனித்தன்மை<br>போன்ற கருத்துகளின் உதவியுடன் கலந்துரையாடல் நடைபெற வேண்டும். பாடப்பகுதியில் வரும் ஐகூ கவிதை குறித்த கட்டுரையையும் பாடல்களையும் வாசிக்க வேண்டும்.<br>மாணவர்கள் குறிப்புகளைத் தயாரிக்கவேண்டும் மாணவர்களே கலந்துரையாடலை மதிப்பீடு செய்தல் வேண்டும்.<br>• குறுகிய வடிவம் • ஆழமான கருத்து<br>• மூன்றாவது வரியில் முக்கிய கருத்து அமையும் | பல்வேறு சுவை வடிவம் குறித்து குறிப்பு தயாரிக்கிறார்கள்.<br><br>'ஐகூ கவிதைகளின் தோற்றமும் வளர்ச்சியும்' என்னும் பொருளில் கட்டுரை எழுதுகிறார்கள் |

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடு/செயல்முறை/மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
| --- | --- | --- |
| • எல்லாக் காலங்களிலும் இயற்கை, கவிதைகளின் பாடுபொருளாக இருந்து வந்துள்ளது. | **கட்டுரை**<br>கலந்துரையாடி எழுதிய கருத்துகளின் துணை கொண்டு ஐகூ கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற பொருளில் கட்டுரை எழுதுகிறார்கள்.<br>**பகுப்பாய்வு செய்தல்**<br>இயற்கையைப் பாடுபொருளாகக் கொண்ட பாடல்களைத் தொகுத்துப் பகுப்பாய்வு செய்கிறார்கள்.<br>பாடப்பகுதியிலுள்ள கவிதைகளை வாசிக்கிறார்கள்.<br>**கலந்துரையாடல்**<br>இயற்கை அழகு, வருணனை, பாதுகாப்பு அழிவு, சுரண்டல் ஆகிய வகைமையில் வகைப்படுத்திப் பாடல்களைத் திரட்டுகிறார்கள். கலந்துரையாடுகிறார்கள். கலந்துரையாடலில் இடம் பெற்ற கருத்துகளின் அடிப்படையில் பல்வேறு மொழி வெளியீட்டு வடிவங்களைத் தயாரித்து (கட்டுரை, சொற்பொழிவு உரை, வாசகர், கடிதம், கவிதை) வெளியிடுகிறார்கள். | 'இயற்கைப் பாதுகாப்பு' என்னும் தலைப்பில் பள்ளி இதழில் கட்டுரை கவிதை ஆகியவற்றை எழுதுகிறார்கள். |
| • கவிதையை விமர்சிக்கும் திறன். | **ஆசிரியர் மதிப்பீடு**<br>• வடிவம்<br>• சொல் ஆளுமை<br>• மொழிநடை<br>• உள்ளடக்கம்<br>• வெளியீட்டு உத்தி | |
| | **இதழ் தயாரித்தல்**<br>அலகின் இறுதியில் கவிதையைக் குறித்துத் தயாரித்த பல்வேறு மொழி வெளியீட்டு வடிவங்களையும் தொகுத்து இதழ் வெளியிடுகிறார்கள்.<br>ஆசிரியர் இவ்விதழை மதிப்பீடு செய்கிறார்<br>**மதிப்பீட்டுக்குறிப்புகள்**<br>• இதழ் வடிவம்<br>• தலைப்புத்தேர்வு<br>• உள்ளடக்கம் (கட்டுரை, கவிதை போன்றன)<br>• படங்கள். | இதழ் தயாரிக்கிறார்கள் |

## அலகுப் பகுப்பாய்வு (Unitwise Analysis)

### கலந்துரையாடல் (நுழைவுச் செயல்பாடு)

ஆசிரியர், கட்டத்திற்குள் அமைந்துள்ள இரண்டு கவிதைகளையும் நகலாக வழங்கி அல்லது நழுவு படத்தின் உதவியுடன் கலந்துரையாடுதல்

- கவிதை என்றால் என்ன?
- கவிதைக்கும் உரைநடைக்கும் உள்ள வேறுபாடு

(கலந்துரையாடிய கருத்துகளை வரிசைப்படுத்துகிறார்கள்)

**கவிதை**

"உள்ளத்து உள்ளது கவிதை
– இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில்
– உண்மை
தெரிந்துரைப்பது கவிதை"

| கவிதைக்கும் உரைநடைக்கும் உள்ள வேறுபாடு | |
|---|---|
| **உரைநடை** | **செய்யுள்** |
| • விரித்து விளக்கி எழுதப்படுவது<br>• சாதாரண சொற்றொடரால் ஆனது<br>• எதுகை மோனை தேவையில்லை<br>• எழுதுவதற்கு அனுபவம் மட்டும் போதுமானது<br>• நெகிழ்ச்சியும் பெருக்கமும் உடையது | • உணர்வின்பாற்பட்டது<br>• கற்பனையை அடிப்படையாகக் கொண்டு, உணர்வு, அழகு ஆகிய வற்றைக் கூறுவது<br>• சுருக்கமும் செறிவும் உடையது<br>• கற்பனையில் பிறக்கிறது<br>• சமூகப் பிரச்சினைகளை வெளிப் படுத்துவது. |

கவிதைக்கும் உரை நடைக்கும் உள்ள வேறுபாட்டினைப் புரிந்துகொண்டு மாணவர்கள் கலந்துரையாடிய கருத்துகளைக் குறிப்பு வடிவில் செயல்பாட்டுக் குறிப்பேட்டில் பதிவு செய்கிறார்கள். பதிவு செய்யும் போது மேற்கூறிய கருத்துகள் இடம்பெற்றுள்ளன என்பதை ஆசிரியர் உறுதி செய்ய வேண்டும்.

### உரைநடை

ஒருவர் எவ்வளவு வேண்டுமானாலும் இலக்கியச் சுவை பற்றி விரித்துரைக்கலாம். அந்தச் சுவை பற்றிய சொற்களெல்லாம் தேனின் இன்பத்தைச் சுவைத்தவன் சப்புக் கொட்டுவது போன்றவைதாம். அவன் சுவைத்துத் திளைப்பதைக் கண்டு பிறரும் அதைச் சுவைத்து உணர முற்படலாம். அவ்வளவே.

வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட! செவ்வியை ஆகுமதி!
யார்அஃது அறிந்திசி னோரே? – சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு இவள்
உயிர்தவச் சிறிது; காமமோ பெரிதே!
– குறுந்தொகை : 18 (குறிஞ்சி)

மண்ணில் மரங்களின் எண்ணிக்கை குறைந்தால்
பிராண வாயு காற்றினில் குறையும்
பிராண வாயு காற்றினில் குறைந்தால்
உனது பிராணன் காற்றிலே கரையும்
உனது சுவாசத்திலும் வேண்டும் எனது தேவை
விசுவாசத்தோடு கூட்டு மரங்களின் எண்ணிக்கையை
– செ. இராஜசேகர்
– இயற்கையை நேசி
புதுக்கவிதைகள்

இலக்கியத் துறையில் ஏற்படக் கூடிய ஆராய்ச்சி எத்தகையதாக இருக்க வேண்டும். யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற வகையில் இலக்கியத்தால் ஒருவன் பெற்ற இன்பத்தைப் பிறரும் அடைவதற்கு வழிகாட்டுவதாக இலக்கிய ஆராய்ச்சி இருக்க வேண்டும்.

### குழுகலந்துரையாடல்

கவிதைகள் வெளிக்காட்டும் மனித உணர்வுகள் சமூகப் பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடுகிறார்கள். பல்வேறு வடிவங்களிலுள்ள கவிதைகளையும் கலந்துரையாடலுக்கு உட்படுத்த வேண்டும். மரபுக் கவிதை, புதுக்கவிதை-ஐக்கூ ஆகிய பல்வேறு வடிவங்களிலுள்ள கவிதைகளை ஆசிரியர் நகலாக அளிக்கிறார்.

**மரபுக் கவிதை**

ஆழ நெடுந்திரை ஆறு கடந்திவர் போவாரோ
வேழ நெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ
தோழமை என்றவர் சொல்லிய சொல்லொரு சொல்லன்றோ
ஏழமை வேடன் இறந்திலன் என்றெனை ஏசாரோ

*- சுந்தரகாண்டம், கம்பராமாயணம்*

**புதுக்கவிதை**

"விழிகள்
நட்சத்திரங்களை வருடினாலும்
விரல்கள் என்னவோ
ஜன்னல் கம்பிகளோடு தான்"

### நகல்

- மரபுக்கவிதை
- புதுக்கவிதை
- ஐக்கூ

கலந்துரையாடிய கருத்துகளின் அடிப்படையில் செயல்பாட்டுக் குறிப்பேட்டில் குறிப்பு எழுதுகிறார்கள்.

கலந்துரையாடலின் இறுதியில் ஆசிரியர் மரபுக்கவிதைக்கும் புதுக்கவிதைக்கும் உள்ள வேறுபாடுகளைத் தொகுத்துக் கூறவேண்டும்.

### மரபுக்கவிதை

- இலக்கணமுடையது
- ஓசை நயமுடையது
- சொற்செறிவுடையது
- அடிவரையறையுண்டு
- 

### புதுக்கவிதை

- இலக்கணம் இல்லை
- எளிய சொல்லாட்சி
- அடிவரையறை இல்லை
- 
- 

**ஐக்கூ**

"தேயிலை பறிப்போரும்
சாய்ந்த இலை மறைவில் போய்ச் செவி
சாய்ப்பரோ குயில் பாட்டு"
- பாடல் 59

"தோட்டத் துடைப்பமே நீ
பார்த்துப் பெருக்கணும், வெண்பனிதான்
போர்த்தியிருக்குது, இலை"
- பாடல் 60
- நால்வர் நானூறு
- ஜப்பானிய ஹைக்கூ

'அணில் முதுகிலும்
அழகு தான்
ஐக்கூ'

குளம்
முகம் பார்க்கும் நிலா
குளிக்காமல் திரும்பினேன்.
- மித்ரா

### மதிப்பீடு

மாணவர்கள் குழுவாக வகைமைகளை மதிப்பீடு செய்கிறார்கள்.

- வடிவம் • பாடுபொருள் • நடை வேறுபாடு

மாணவர்களின் செயல்பாட்டையும் மதிப்பீட்டுக் குறிப்புகளையும் மதிப்பிடுகிறார்கள்

- மாணவர்கள் பங்களிப்பு • பேச்சாற்றல் • கருத்துக்கோவை

### கற்றல் அடைவு

- கவிதைகள் வெளிப்படுத்தும் மனித உணர்வுகளைக் குறிப்பாகத் தயாரிக்கிறார்கள்.
- கவிதையின் வகைமைகள் பற்றிய குறிப்புத் தயாரிக்கிறார்கள்.

## பாட விளக்கம்

### மானுடம்

ஆசிரியர் பற்றுவரவு என்ற கவிதையில் மனிதன் இயற்கையைப் பாதுகாக்காமல் அழித்துக் கொண்டிருப்பதன் நிலையை விளக்குகிறார். இந்தப் பூமிக்கு வெறுங்கையோடு பிச்சைக்காரனாக வந்துவிட்டு பூமிக்குக் கடனாளியாகச் சாக வேண்டுமா என்று கேட்கிறார். இயற்கையின் ஒவ்வொரு பொருளையும் மனிதன் பயன்படுத்துகிறான். அதற்குப் பதிலாக அவன் என்ன செய்கிறான் என்ற கேள்வியை எழுப்பு கிறார். எனவே நீ இயற்கை தரும் வரப் பிரசாதங்களை இலவச மாகப் பெற்றுக் கொள் கிறாயே. அதற்காக நீ இயற்கையைப் பாதுகாக்க வேண்டும் என்கிறார். மனிதனுக்கு மட்டுந்தான் ஆறாவது அறிவு உள்ளது. அதை நீ சரியாகப் பயன்படுத்திக்கொள். இயற்கையைப் பாதுகாத்து மனித நேயத்துடன் விளங்குவதே மனிதத்தன்மை என்கிறார். நீ பூமியில் வாழ்ந்ததற்கான தடயத்தை விட்டுச் செல். ஒரு தடயமுமில்லாமல் மரணமடைய நீ வெட்கப்படவேண்டும் என்கிறார்.

**சுயமதிப்பீட்டுப் படிவம்**

| கட்டுரை | உண்டு | இல்லை |
|---|---|---|
| • முன்னுரை<br>• கருத்துகள்<br>• வடிவம்<br>• கருத்துக் கோவை<br>• மொழிநடை<br>• முடிவுரை | | |

### மானுடத்தின் திருவிழா

மனிதனுக்கும் இயற்கைக்குமான வேறுபாடுகளைக் கூறுவதன் வாயிலாக மானுடத்தை விளக்குகிறார். மனிதனால் உருவாக்கப் பட்டவை இயற்கைக்கு இணையாகாது என்பதைச் சுட்டுகிறார். கோலத்திற்காக இடப்படும் புள்ளிகள் ஒழுங்கானவையாக இருந்தாலும் நட்சத்திரங்களின் அழகு அதற்கில்லை. மனிதன் உருவாக்கிய வாய்க்கால்கள் போல் நதிகள் நேராக ஓட வில்லையென்றாலும் நதிகளின் அழகு வாய்க்காலுக்கில்லை. இதுபோன்று மனிதன் உருவாக்கிய பூங்காக்கள், பாடும் சங்கீதம், ஆடும் நடனம், மனிதனின் சுதந்திரம் என்று மனிதனின் ஒவ்வொரு செயலையும் இயற்கையோடு ஒப்பிட்டு

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- முன்னுரை
- கருத்துகள்
- வடிவம்
- கருத்துக் கோவை
- மொழிநடை
- முடிவுரை

இயற்கைக்கு இணையாகாது என்கிறார். செயற்கையை விட இயற்கையே அழகானது. அங்குதான் மானுடம் சிறப்படைகிறது என்று ஆசிரியர் விளக்குகிறார். இப்பாடலிலும் ஆசிரியர் மனித நேயத்தையும் இயற்கையையும் பாதுகாக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்.

### கட்டுரை எழுதுதல்

மாணவர்கள் பாடப்பகுதியை வாசிக்கிறார்கள். இரு குழுவாகப் பிரிக்கிறார்.

ஒவ்வொரு பகுதியையும் இரு குழுவுக்கும் அளித்தல். பாடப்பகுதியை வாசிக்கும் போது ஆசிரியர் சிறுசிறு வினாக்கள் வாயிலாகப் பயிற்சி அளித்து அவற்றின் கருத்துகளைத் தொகுக்கும்படி கூறலாம்.

கீழ்வரும் வினாக்களின் அடிப்படையில் கலந்துரையாடுகிறார்கள்.

- இயற்கையைப் பாதுகாக்க வேண்டும். ஏன்?
- இயற்கை அழிவு ஏற்படுவதற்கு காரணம் மனிதன் மட்டுமா?
- பாடப்பகுதியில் உள்ள பாடலும் பாடல் கருத்துகளும்
- புதுக்கவிதையின் தோற்றம் மற்றும் வளர்ச்சி

ஒவ்வொரு குழுவும் அவரவர் பகுதியைப் படித்து மேற்கூறிய வினாக்களின் விடை காணும் வகையில் கலந்துரையாட வேண்டும்.

முக்கியமான கருத்துகளைப் பல்வேறு கவிதைகளையும் கருத்துகளையும் குறித்துக் கலந்துரையாடிய மாணவர்கள் வடிவவேறுபாடு புதுக்கவிதையின் தோற்றம், கவிதைக் கருத்துகள் ஆகியவற்றைக் குறித்துக் குறிப்பு தயாரித்து வாசிக்கிறார்கள். மாணவர்கள் தயாரித்த குறிப்புகளை மாணவர்கள் சுயமாக மதிப்பிடுகிறார்கள். சுயமதிப்பீட்டுப் படிவம் கீழே தரப்பட்டுள்ளது. ஆசிரியர் அவற்றை மதிப்பிட்டு ஆசிரியர் திட்டக்குறிப்பேட்டில் பதிவு செய்ய வேண்டும்.

### கற்றல் அடைவுகள்

- புதுக்கவிதைகளின் வடிவம் தோற்றம் குறித்த குறிப்புகள் எழுதுகிறார்கள்.
- கவிதைகளின் தனித்தன்மைகள் குறித்துக் கலந்துரையாடி மாணவர்கள் கட்டுரைகள் எழுதுகிறார்கள்.

### கவிதை மொழிதல்

பல்வேறு வடிவங்களில் அமைந்த கவிதைகளையும் கவிதைக் கருத்துகளையும் புரிந்து கொண்ட மாணவர்களிடம் கவிதைத் தொகுப்பு உருவாக்கச் செய்தல் வேண்டும். பல்வேறு சுவை, வடிவம், கருத்துகள் அமைந்த பாடல்களைத் தொகுத்து அவற்றை வரிசைப் படுத்துகிறார்கள். ஆசிரியரும் பல்வேறு கவிதைகளையும் கவிதை நூல்களையும் அளிக்க வேண்டும். நூலகத்தையும் பயன்படுத்தக் கூற வேண்டும். வகுப்பு மாணவர்கள் இரு குழுக்களாகப் பிரிந்து கவிதை மொழிதல் செயல்பாட்டை நடத்துகிறார்கள். கவிதை மொழிதல் செயல்பாட்டிற்கான ஆயத்தங்களை மாணவர்களே செய்தல்.

- நாள்
- அழைப்பிதழ்
- வகுப்பு அலங்காரம்
- தலைவர் தேர்வு
- தலைமைப் பொறுப்பு

கவிதைகளைத் தொகுத்துக் கலந்துரையாடல் நடத்தும்போது ஆசிரியர் கவனிக்க வேண்டிய கருத்துகள்:

- மொழிநடை
- அளவு
- பொருள் / தெளிவு
- மையக்கருத்து
- நயம்

கவிதை மொழிதலுக்கான பாடல்கள் சில அலகின் இறுதியில் காண்க. (பாடல் 1 முதல் 6 வரை)

கவிதை மொழிதலின் போது நடைபெறும் செயல்முறையை ஆசிரியர் மதிப்பிட வேண்டும். கவிதை மொழிதல் நாளன்று இறுதியில் அன்றைய செயல்பாடுகளை அறிக்கையாக எழுதி வெளியிட வேண்டும். மறுநாள் பத்திரிகையில் வெளியிடும் பொருட்டு ஒரு பத்திரிகைச் செய்தியை மாணவர்கள் தயாரிக்க வேண்டும். கவிதை மொழிதலுக்கான மதிப்பீட்டுக் குறிப்புகளை மாணவர்களே உருவாக்கி மதிப்பிட வேண்டும்.

**குழுமதிப்பீட்டுப் படிவம்**

**கவிதை மொழிதல்**

| | சரியானது | சரியல்ல |
|---|---|---|
| • ஓசை<br>• நேரம்<br>• சுவை<br>• உச்சரிப்பு<br>• குரல் ஏற்றத்தாழ்வு<br>• குரல் வளம் | | |

ஒரு குழுவை ஆசிரியர் மதிப்பிடும்போது தேவைப்படும் மதிப்பீட்டுக் குறிப்புகள்.

## குழுவைமதிப்பிடுதல்

- நேர்மை
- நடுவுநிலைமை
- தலைமைப்பண்பு
- பங்கேற்பு

மாற்றுத்திறனாளி மாணவர்கள் எளிமையான பாடல்களை மொழிய ஆசிரியரோ, சக மாணவர்களோ உதவ வேண்டும்

மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு ஒலி ஒளி ஊடகம் பயன்படுத்திப் பாடல்களைக் கேட்கச் செய்யலாம்.

## மதிப்பீடு

மாணவர்கள் மதிப்பீடு செய்கிறார்கள். ஆசிரியர் இறுதியில் மதிப்பீடு செய்து மாணவர்கள் மதிப்பிட்ட மதிப்பீட்டுக் குறிப்புகளைப் பத்திரிகைச் செய்தி, அறிக்கை ஆகியவற்றை மதிப்பீடு செய்ய வேண்டும்.

## கற்றல் அடைவு

- பத்திரிகைச் செய்தி தயாரிக்கிறார்கள்.
- கவிதை மொழிதல் நிகழ்ச்சிக்கான அறிக்கை தயாரிக்கிறார்கள்.
- பல்வேறு சுவைகளில் அமைந்த கவிதைகளைத் திரட்டுகிறார்கள்.
- கவிதைகளின் தனித்தன்மைகள் குறித்துக் குறிப்பு தயாரித்துக் கட்டுரை எழுதுகிறார்கள்.

## கலந்துரையாடல்

கவிதைகளின் கூறுகளான படிமம், உத்தி, குறியீடு ஆகியவை குறித்துக் கலந்துரையாடுகிறார்கள். பாடப்பகுதியிலுள்ள பாடலையும் அவற்றிற்கு இடையே அமைந்துள்ள படிமம் குறியீடு ஆகியவற்றையும் வாசிக்கிறார்கள். படிமம், குறியீடு ஆகியவற்றின் விளக்கத்தை மாணவர்கள் கலந்துரையாடும் போது ஆசிரியர் அளிக்க வேண்டும். படிமம் குறியீடு அமைந்த

எடுத்துக்காட்டு களையும் மாணவர் களுக்கு அளிக்க வேண்டும். படிமம் குறியீடு பற்றிய குறிப்பு தயாரிக்கிறார்கள். தொடர்ந்து பாடப் பகுதியில் உள்ள கருத்துகளை கலந்துரை யாட வேண்டும். ஒவ்வொரு குழுவில் உள்ள மாணவர் களும் பாடல் கருத்தினை உரைநடையாக வடிவமைப்பு செய்ய வேண்டும். பாடல் கருத்துகளை மாணவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளட்டும்.

### மதிப்பீடு

மாணவர்கள் ஒருவருக்கொருவர் மதிப்பீடு செய்கிறார்கள்

ஆசிரியர் பொருத்தமான பாடல் - விளக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பீடு செய்யவேண்டும். (தேவையான விளக்கம் பக்கம் 22இல் காண்க)

### கற்றல் அடைவு

பாடல் கருத்துகளை வடிவமாற்றம் செய்கிறார்கள்.

படிமம் குறியீடு குறித்து விளக்கமாக எடுத்தக்காட்டுகளுடன் குறிப்பு எழுது கிறார்கள்.

சிறப்புக் கட்டுரை எழுதுகிறார்கள்.

**பாடவிளக்கம்**

**குருவிக்கு வேண்டுகோள்**

மனிதன் காட்டை அழித்துக் கட்டிடங்கள் கட்டியதால் பறவைகளுக்குத் தங்குமிடமில் லாததால் வீட்டிற்குள் கூடுகட்ட வருகிறது. மனிதன் அப்பறவைகளை விரட்டி விடுகிறான். தன் வீட்டு சன்னல்கள் தன் வீட்டிற்குள் இருக்கும் சுவாசம் வெளியே போவதற்காகவும் தன் வீட்டுத் துணிகள் உலர்வதற்காகவும் காற்று உள்ளே வருவதற்காகவும் தான் இருக்கின்றன. மாறாக உள்ளே வராதே குருவியே என்று விரட்டுகிறான். நாட்டில் மரங்கள் உள்ளனவல்லவா? நீ ஏன் என் வீட்டிற்குள் கூடு கட்ட வருகிறாய். உன்னை அனுப்பிவைத்தது யார்? என்று கேட்கிறார். அக்குருவியால் தன் வீடு அசுத்தமாகிவிடும் என்பதால் அவன் அதை விரட்டுகிறான். இக்கவிதை மனிதனின் சுயநலத்தையும் இயற்கையை அழிக்கும் மனநிலையையும் காட்டுகிறது. மனிதன் இயற்கையை அழித்து நகரத்தை உருவாக்குவதால் பறவைகள் வாழிடமின்றித் தவிக்கின்றன என்பதை ஆசிரியர் சுட்டுகிறார்.

### சிறுகட்டுரை எழுதுதல்

ஐக்கூ கவிதைகளின் தோற்றம் வடிவம் கருத்துகள் ஆகியவை குறித்த பொதுக் கலந்துரையாடல் நடத்துகிறார்கள். கலந்துரையாடலில் இடம்பெற வேண்டிய கருத்துகள்

- தோற்றம்
- வடிவம்
- கருத்துகள்

பாடப்பகுதியிலுள்ள பாடலையும் ஐக்கூ பாடலைக் குறித்த விளக்கத்தையும் வாசிக்கிறார்கள். ஐக்கூ கவிதைகள் பற்றிய குறிப்புகள் தயாரித்து வாசிக்கிறார்கள்.

ஆசிரியர் கலந்துரையாடிய கருத்துகளைத் தொகுத்து வழங்கும் போது இடம்பெற வேண்டிய கருத்துகள்.

- ஜப்பானிய இலக்கிய வகைகளுள் ஒன்று
- தோற்றம் 15ஆம் நூற்றாண்டு
- சிறிய வடிவம்
- 5 வகையாகப் பிரித்துள்ளனர்
- ஐக்கூவின் பின்வந்த கவிதை வடிவங்களுக்கு அடிப்படையாக அமைந்தன.

கலந்துரையாடிய கருத்துகளின் துணைகொண்டு ஐக்கூ 'கவிதைகளின் தனித்தன்மைகள்' என்ற தலைப்பில் கட்டுரை தயாரிக்கிறார்கள்.

## மதிப்பீடு

ஆசிரியர் கட்டுரைக்கான மதிப்பீட்டுக் குறிப்புகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்ய வேண்டும்.

| சுயமதிப்பீட்டுப் படிவம் | | |
|---|---|---|
| கட்டுரை | | |
| | உண்டு | இல்லை |
| • முன்னுரை<br>• கருத்துக்கோவை<br>• மொழிநடை<br>• வடிவம் | | |

## கற்றல் அடைவு

ஐக்கூ கவிதைகளின் தனித்தன்மைகள் குறித்த கட்டுரை தயாரிக்கிறார்கள்.

**பகுப்பாய்வு**

இயற்கையைப் பாடுபொருளாகக் கொண்ட பாடல்களைத் தொகுத்துப் பகுப்பாய்வு செய்கிறார்கள் பாடல்கள் தொகுக்கிறார்கள்.

### அறிமுக நோக்கில் ஹைகூ கவிதை

ஜப்பானியர்களின் வாழ்க்கை முறையின் இலக்கிய வெளிப்பாடுதான் ஹைகூ கவிதைகள். கிழக்கத்திய பண்பாட்டின் சிறப்பை வெளிப்படுத்துகின்றன இக்கவிதைகள். இக்கவிதைகளின் தனித்தன்மைகளைப் பற்றி இப்பாடப்பகுதி விளக்குகிறது. ஐகூ கவிதையின் தோற்றம், அதன் வடிவ வகைகள் பற்றியும் விளக்குகிறது. கட்டவ்டா, செடோகா, சோகா, தான்கா, இரெங்கா போன்ற வடிவங்கள் பின்னர் தோன்றிய ஐகூ வடிவங்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தன.

**ஐகூ கவிதைகள்**

காணாமல் போய்விட்டது
ஊரின் குளம் மட்டுமல்ல
அதில் நிதம் குளித்த நிலவும் கூட

பத்துகாகிதப் பந்துகளுக்குப்பின்
மரங்களைக் கொல்லாதீர்
என்று துவயங்கியது கவிதை

எண்ணெய்க் குழாய்கள்
மண்ணைப் புணர்ந்ததில்
கிழிந்த தென்னவோ
ஓசோன் திரை தான்

வானிலிருந்து குதித்தும்
காயம் இல்லை
மழைத்துளி

ஹைகூ கவிதையை
முதுகில் சுமப்பவை
அணில்கள்

வானத்தை அழவைக்கும்
அற்புதப் பூச்சாண்டி
மரம்

உறங்கும் தீ
தீப்பெட்டிக்குள்
தீக்குச்சிகள்

ஒட்டடையை அகற்றாதீர்கள்
பாவம்
சிலந்தியின் வீடு

அருவருப்பு அல்ல
உழைப்பின் நிறம்
கருப்பு

– இணையம்

பாடல்களின் கருத்துகள் குறித்த கலந்துரையாடல்

பாடப்பகுதியில் உள்ள பாடல் கருத்தினையும் இணைத்து இயற்கையைப் பாதுகாப்பதன் அவசியத்தையும் கலந்துரையாடலுக்கு உட்படுத்துகிறார்கள்

- கலந்துரையாடல் கருத்துகள்
- இயற்கை வருணனை
- இயற்கைப் பாதுகாப்பு
- சுரண்டலுக்கு எதிரான மனப்பான்மை
- இயற்கையை அழித்தல்
- உயிரினங்களும் இயற்கையும்

இயற்கைப் பாதுகாப்பு குறித்து குறிப்புகள் தயாரிக்கிறார்கள்

கலந்துரையாடலில் கருத்துகளை வகைப்படுத்திக் கூறுவதை மாணவர்களே மதிப்பீடு செய்கிறார்கள்.

இயற்கைப் பாதுகாப்பு என்னும் தலைப்பில் கவிதைகள், ஹைகூ, கட்டுரைகள், துணுக்குகள் முத்திரை வாக்கியங்கள் போன்றவற்றை எழுதிப் பள்ளி மலரில் வெளியிடுகிறார்கள்.

## இதழ் தயாரித்தல்

இவ்வலகின் வாயிலாகக் கிடைத்த மொழி வெளியீட்டு வடிவங்களைத் தொகுத்து இதழ் தயாரிக்கிறார்கள். இதழை ஆசிரியர் மதிப்பிடுகிறார்.

## இதழை மதிப்பிடுவதற்கான மதிப்பீட்டுக் குறிப்புகள்

- இதழ் வடிவம்
- தலைப்புத் தேர்வு
- உள்ளடக்கம்
- படங்கள்

## ஆசிரியர் மதிப்பீட்டுக் குறிப்புகள்

- வடிவம்
- உள்ளடக்கம்
- சொல் ஆளுமை
- வெளியீட்டு உத்தி
- மொழிநடை

## கற்றல் அடைவுகள்

இயற்கைப் பாதுகாப்பு என்ற பொருளில் கட்டுரை எழுதுகிறார்கள்

வகுப்பில் நடைபெறும் செயல்முறையை ஆசிரியர் மதிப்பிட்டு Teacher Planner-இல் பதிவு செய்ய வேண்டும்.

## தொடர் மதிப்பீடு

- கலந்துரையாடல்
- கவிதைகளைத் தொகுத்தல்
- பகுப்பாய்வு செய்தல்
- விவாதித்தல்

## அலகுத் தேர்வு

அலகு நிறைவு பெற்ற பின் அலகுத் தேர்வு நடத்தி மதிப்பீடு செய்ய வேண்டும்

## பருவ மதிப்பீட்டிற்கான செயல்பாடுகள்

- குறிப்பு தயாரித்தல்
- கட்டுரைகள்
- விவாதக் குறிப்பு
- விமர்சனக் குறிப்பு
- சிறுகட்டுரை
- ஒப்பீட்டுக்குறிப்பு
- கருத்தரங்கக் கட்டுரை
- பத்திரிக்கைச் செய்தி
- பல்வேறு மொழி வெளியீட்டு வடிவங்களில் இயற்கை பற்றியச் செய்திகளை வெளியிடுதல் (கட்டுரை, பழமொழிகள்.....)
- அறிக்கை

## வினாக்கள்

1. உயிரினங்களில் மனிதன் மட்டும்தான்
அரசியல் கலையைக் கண்டுபிடித்தவன்
ஆறாவது அறிவு என்பது வஞ்சகவலையா?
உயினங்களில் மனிதன் மட்டும் தான்
சகமனிதனின் காலில் விழுந்து வணங்குபவன்
ஆறாவது அறிவு என்பது சுயமரியாதையின் கல்லறையா?
- இவ்வரிகளை வாசித்து விமர்சனக் குறிப்புத் தயார் செய்க (Analysis)

2. புதுக்கவிதையின் வருகையும் விளைவும் பற்றிய உங்கள் கருத்துகளைச் சிறு கட்டுரையாக எழுதுக. (Synthesis)

3. பிறந்தது நாட்டுப்புறப் பாடலாய்
வளர்ந்தது புதுக்கவிதையாய்
மரித்து விட்டால் நானும் மரபுக்கவிதை தான்
- கோமதியின் மைந்தன்

இக்கவிதையில் அடங்கியிருப்பது

- படிமம்
- குறியீடு
- உவமை
- உருவகம்

4. கூடு கட்ட விடாமாட்டேன்
சின்னக்குருவியே என் வீட்டு
சன்னல்கள் திறந்திருக்கக் காரணம்
பருவக்காற்றுகள் உள்ளே வர

இப்பாடல் வரிகளில் வெளிப்படும் நகரமயமாதலின் தீய விளைவுகள் குறிந்துக் குறிப்பு எழுதுக.

5. உயிரியல் மர்மம் தேடி
உழைக்கின்றோம்
இவ்வாறு கவிஞர் ந. பிச்சமூர்த்தி கூறும் கருத்தை இன்னறய வளர்ச்சியோடு ஒப்பீடு செய்க.

6. நமக்கிருப்பது போல்
பறவைகருக்கு
நாடுகளும்
எல்லைகளும் இல்லை
ஆனால்
பறவைகளின் சுதந்திரம்
நம்மிடம் இல்லை.
இக்கவிதைக் கருத்தினை விமர்ச்சித்துக் குறிப்பு தயாரிக்க.

7. புதுக்கவிதைக்கும் மரபுக்கவிதைக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக

மன்னிக்க வேண்டும்
இப்படிச் சொல்வதற்கு
என்னைமிக
மன்னிக்க வேண்டும்
பரபரப்பாய் விரைகின்ற
நாட்பொழுதில்
சுறுசுறுப்பாய்ச் சுவைக்கச்
சிறுதுண்டிதுவும்
இருக்கட்டுமே என
எடுத்து வந்து
வாகாய் வைத்த இடம்
நீ படுத்த இடம்
என மறந்து விட்டதற்கு
மன்னிக்க வேண்டும்
என்னை மிக
மன்னிக்க வேண்டும்

(தாமஸ் ஹார்டியின் ஆங்கிலக் கவிதையினைத் தழுவித் தமிழில்) - தமிழச்சி

8. ஐகூ கவிதைகள் தோன்றிய நாடு
(இந்தியா, பிலிப்பைன்ஸ், சீனா, ஜப்பான்)

9. புதுக்கவிதைக்கும் ஐகூ கவிதைக்கும் உள்ள வேறுபாடு குறித்துக் குறிப்பு எழுதுக

10. மேகத்தின் நீரையும்
சந்திர சூரிய விளக்குகளையும்
பயன்படுத்தினாயே
கட்டணம் கட்டியதுண்டா?
இயற்கையைத்தன் வாழ்க்கையில் மிகுதியாக
அனுபவித்த போதும் இயற்கையை அழிக்கவே முயல்கிறான் மனிதன்.
இப்பாடல் அடிகள் வழியாக அப்துல் ரகுமான் கூற நினைப்பது என்ன? விமர்சனம் செய்க.

11. படிமத்திற்கும் குறிப்பீட்டிற்கும் உள்ள வேறுபாடுகளைக் கவிதைச் சிமிழ் என்ற பாடப்பகுதியின் துணை கொண்டு எழுதுக.

12. இயற்கையோடு ஒன்றி வாழ வேண்டிய மனிதன் இயற்கையைச் சுரண்டுகிறான் இயற்கைக்கு எதிராகச் செயல்படும் மனிதனைப் பற்றி அப்துல் ரகுமான் மானுடத்தின் திருவிழா என்ற கவிதையில் கூறுவனவற்றை விளக்குக.

## துணை நூல்கள்


1. பாரதியார் கவிதைகள் - பாரதியார்
2. பாரதிதாசன் கவிதைகள் - பாவேந்தர் பாரதிதாசன்
3. தோகையெல்லாம் துப்பாக்கிகள் - ஆண்டாள் பிரியதர்ஷினி
4. பச்சை தேவதை - சல்மா
5. ஒரு மாலை இன்னொரு மாலையும் - சல்மா
6. ஆலாபனை - அப்துல்ரகுமான்
7. எஞ்சோட்டுப்பெண் - தமிழச்சித் தங்கபாண்டியன்
8. புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் - வல்லிக்கண்ணன்
9. பிச்சமூர்த்திக் கவிதைகள் - ந. பிச்சமூர்த்தி
10. ஞானக்கூத்தன் கவிதைகள் - ஞானக்கூத்தன்

பாடல் - 1

## பாரத தேசம்

பாரத தேசமென்று பெயர் சொல்லுவார் – மிடிப்
பயங் கொல்லுவார் துயர்ப் பகை வெல்லுவார்
வெள்ளிப் பனிமலையின் மீதுலவுவோம் அடி
மேலைக் கடல் முழுதுங் கப்பல் விடுவோம்
பள்ளித் தலமனைத்துங் கோயில் செய்குவோம்
எங்கள்
பாரத தேசமென்று தோள் கொட்டுவோம்

சிங்களத் தீவினுக்கோர் பாலமமைப்போம்
சேதுவை மேடுறுத்தி வீதிசமைப்போம்
வங்கத்திலோடி வரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளிற் பயிர் செய்குவோம்.

வெட்டுக் கனிகள் செய்து தங்கமு தலாம்
வேறு பல பொருளுங் குடைந்தெடுப்போம்
எட்டுத் திசைகளிலுஞ் சென்றிவை விற்றே
எண்ணும் பொருளனைத்தும் கொண்டு
வருவோம்.

முத்துக் குளிப்பதொரு தென்கடலிலே
மொய்த்து வணிகர்பல நாட்டினர் வந்தே
நத்தி நமக்கினிய பொருள் கொணர்ந்து
நம்மருள் வேண்டுவது மேற்கரையிலே

சிந்து நதியின் மிசை நிலவினிலே
சேர நன்னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினிற் பாட்டிசைத்துத்
தோணிகளோட்டி விளையாடி வருவோம்

கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறுகொள்ளுவோம்
சிங்க மராட்டியர் தங்கவிதை கொண்டு
சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்.

காசி நகர்ப்புலவர் பேசுமுரைதான்
காஞ்சியிற் கேட்பதற்கோர் கருவிசெய்வோம்
ராசபுத்தானத்து வீரர் தமக்கு
நல்லியற் கன்னடத்துத் தங்கமளிப்போம்

பட்டினிலாடையும் பஞ்சிலுடையும்
பண்ணி மலைகளென வீதி குவிப்போம்
கட்டித் திரவியங்கள் கொண்டு வருவார்
காசினி வணிகருக் கவை கொடுப்போம்

ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள்
வைப்போம்
ஓயுதல் செய்யோம் தலை சாயுதல் செய்யோம்
உண்மைகள் சொல்வோம் பல வண்மைகள்
செய்வோம்

குடைகள் செய்வோம் உழுபடைகள் செய்வோம்
கோணிகள் செய்வோம் இரும்பாணிகள்
செய்வோம்
நடையும் பறப்புமுணர் வண்டிகள் செய்வோம்
ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள் செய்வோம்

மந்திரங்கற்போம் வினைத் தந்திரங்கற்போம்
வானையளப்போம் கடல் மீனையளப்போம்
சந்திரமண்டலத்தியல் கண்டு தெளிவோம்
சந்தி தெருப்பெருக்கும் சாத்திரங்கற்போம்
காவியஞ் செய்வோம் நல்ல காடு வளர்ப்போம்
கலைவளர்ப்போம் கொல்லருலை வளர்ப்போம்
ஓவியம் செய்வோம் நல்ல ஊசிகள் செய்வோம்
உலகத் தொழிலனைத்து முவந்து செய்வோம்

சாதி இரண்டொழிய வேறில்லை யென்றே
தமிழ்மகள் சொல்லிய சொல் அமிழ்த
மென்போம்
நீதிநெறியினின்று பிறர்க்குதவும்
நேர்மையர் மேலவர்; கீழவர் மற்றோர்.

– பாரதியார் கவிதைகள்

பாடல் - 2

**சிலப்பதிகாரம்**

**வா**யிலோயே வாயிலோயே!
அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே
இணையரிச் சிலம்பொன்றேந்திய கையள்
கணவனை யிழந்தாள் கடையகத்தாளென்று
அறிவிப்பாயே! அறிவிப்பாயே என
வாயிலோன் வாழியெங் கொற்கை வேந்தே வாழி!
தென்னம் பொருப்பின் தலைவ வாழி!
செழிய வாழி தென்னவ வாழி!
பழியொடு படராப் பஞ்சவ வாழி!
அடர்த்தெழு குருதியடங்காப் பசுந்துணிப்
பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி
வெற்றிவேற்றடக்கைக் கொற்றவை யல்லள்
அறுவர்க்கிளைய நங்கை இறைவனை
ஆடல்கண்டருளிய அணங்கு சூருடைக்
கானகம் கிழித்த பெண்ணுமல்லள்
செற்றனள் போலும் செயிர்த்தனள் போலும்
பொற்றொழில் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை இழந்தாள் கடையகத்தாளே
கணவனை இழந்தாள் கடையகத்தாளே என
வருக மற்றவள் தருக ஈங்கென
வாயில் வந்து கோயில் காட்டக்
கோயில் மன்னனைக் குறுகினள் சென்றுழி
நீர்வார் கண்ணை எம்முன் வந்தோய்
யாரையோ! நீ மடக்கொடியோய் எனத்
தேரா மன்னா செப்புவதுடையேன்
எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சு சுடத்தான்
தன்
அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகாரென்பதியே அவ்வூர்
ஏசாச் சிறப்பின் இசை விளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனையாகி
வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்னா நின்னகர்ப் புகுந்தீங்கு
என்காற் சிலம்பு பகர்தல் வேண்டி நின்பாற்

கொலைக்களப்பட்ட கோவலன் மனைவி
கண்ணகி யென்பதென் பெயரேயெனப்
பெண்ணணங்கே
கள்வனைக் கோறல் கடுங்கோலன்று
வெள்வேற் கொற்றங் காண் என ஒள்ளிழை
நற்றிறம் படராக் கொற்கை வேந்தே
என்காற் பொற்சிலம்பு மணியுடை அரியே எனத்
தேமொழி யுரைத்தது செவ்வை நன்மொழி
யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே
தருகெனத் தந்து தான்முன் வைப்பக்
கண்ணகி அணிமணிக் காற்சிலம்புடைப்ப
மன்னவன் வாய்முதல் தெறித்தது மணியே,
மணிகண்டு
தாழ்ந்த குடையன் தளர்ந்த செங்கோலன்
பொன் செய் கொல்லன் தன் சொல் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்
மன்பதை காக்குந் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகவென் ஆயுளென
மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே தென்னவன்
கோப்பெருந்தேவி குலைந்தனள் நடுங்கிக்
கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில்லென்று
இணையடி தொழுது வீழ்ந்தனளே மடமொழி!

பாடல் - 2

## எழுச்சியுற்ற பெண்கள்

மேற்றிசையில் வானத்தில் பொன்னுருக்கு
 வெள்ளத்தில் செம்பரிதி மிதக்கும்நேரம்!
வேற்கண்ணி யாளொருத்தி சோலைதன்னில்
 விளையாட நின்றிருந்தாள் மயிலைப்போலே!
காற்றடித்த சோலையிலே நேரம் பார்த்துக்
 கனிய டித்துக் கொண்டு செலும் செல்வப்பிள்ளை
ஆற்றுவெள்ளம் போலாசை வெள்ளம் தூண்ட
 அவளிடத்தே சில சொன்னான் பின்னுஞ் சொல்வான்.

விரிந்தஒரு வானத்தின் ஒளிவெள்ளத்தை
 விரைந்துவந்து கருமேகம் விழுங்கக்கூடும்!
இருந்தவெயில் இருளாகும் ஒருகணத்தில்!
 இதுஅதுவாய் மாறிவிடும் மறு கணத்தில்
தெரிந்ததுதான்; ஆனாலும் ஒன்றேயொன்று!
 தெளித்தஓர் உள்ளத்தில் எழுந்தகாதல்
பருந்துவந்து கொத்துமென்றும் தணிவதில்லை;
 படை திரண்டு வந்தாலும் சலிப்பதில்லை!

கன்னத்தில் ஒரு முத்தம் வைப்பாய் பெண்ணே
 கருதுவதிற் பயனில்லை தனியாய் நின்று
மின்னிவிட்டாய் என்மனதில்! பொன்னாய்ப் பூவாய்
 விளைத்துவிட்டாய் கண்ணெதிரில்! என்று சொன்னான்
கன்னியொரு வார்த்தையென்றாள் என்னவென்றான்
 கல்வியற்ற மனிதனைநான் மதியேன் என்றாள்
பன்னூற் பண்டிதனென்று தன்னைச் சொன்னான்
 பழச்சுளையின் வாய்திறந்து சிரித்துச் சொல்வாள்;

பெருங்கல்விப் பண்டிதனே! உனக்கோர்கேள்வி;
 பெண்களுக்குச் சுதந்தரந்தான் உண்டோ? என்றாள்
தரும்போது கொள்வதுதான் தருமம் என்றான்
 தராவிடில்தான் மேற்கொண்டால் என்னவென்றாள்
திருமணமா காதவள்தன் பெற்றோரின்றிச்
 செயல்ஒன்று தான்செய்தல் அதர்மம் என்றான்
மருவ அழைக் கின்றாயே நானும் என்றன்
 மாதா பிதாவின்றி விடை சொல்வேனோ?

என்றுரைத்தாள். இதுகேட்டுச் செல்வப்பிள்ளை
என்னேடி, இது உனக்குத் தெரியவில்லை
மன்றல்செயும் விஷயத்தில் ஒன்றில்மட்டும்
மனம்போல நடக்கலாம் பெண்கள் என்றான்
என்மனது வேறொருவன் இடத்திலென்றே
இவனிட்ட பீடிகையைப் பறக்க செய்தாள்
உன்தலத்தை இழக்கின்றாய் வலியதானே
உனக்களிப்பேன் இன்பமென நெருங்கலானான்!

அருகவளும் நெருங்கி வந்தாள் தன்மேல்வைத்த
ஆர்வந்தான் எனநினைத்தான்! இமைக்குமுன்னே
ஒருகையில் உடைவாளும் இடதுகையில்
ஓடிப்போ! என்னுமொரு குறிப்புமாகப்
புருவத்தை மேலேற்றி விழித்துச் சொல்வாள்
புனிதத்தால் என்காதல் பிறன்மேலே என்று
பரிந்துரைத்தேன்! மேற்சென்றாய்! தெளித்தகாதல்
படைதிரண்டு வந்தாலும் சலியாதென்றாள்.

ஓடினான் ஓடினான் செல்வப்பிள்ளை
ஓடிவந்து மூச்சுவிட்டான் என்னிடத்தில்
கூடிஇரு நூறுபுலி எதிர்த்ததுண்டோ?
கொலையனி டமிருந்து மீண்டதுண்டோ?
ஓடிவந்த காரணத்தைக் கேட்டேன் அன்னோன்
உரைத்துவிட்டான்! தானவற்றைக் கேட்டுவிட்டேன்
கோடி உள்ளம் வேண்டுமிந்த மகிழ்ச்சிதாங்கக்
குலுங்கநகைத் தேயுரைத்தேன் அவனிடத்தில்

செல்வப்பிள்ளாய்! இன்றுபுவியின் பெண்கள்
சிறுநிலையில் இருக்கவில்லை விழித்துக் கொண்டார்!
கொல்லவந்த வாளைநீ குறைசொல்லாதே!
கொடுவாள் போல் மற்றொருவாள் உன்மனைவி
மெல்லிடையில் நீகாணாக் காரணத்தால்
விளையாட நினைத்துவிட்டாய் ஊர்ப் பெண்கள்மேல்!
பொல்லாத மானிடனே மனச்சான்றுக்குள்
புகுந்துகொள்வாய்! நிற்காதே! என்றேன்; சென்றான்.

– பாரதிதாசன்

பாடல் - 4

## திருக்குற்றாலக் குறவஞ்சி

**சி**ங்கனும் சிங்கியும் எதிர்த்துரையாடல்

இத்தனை நாளாக என்னுடன் சொல்லாமல்
எங்கே நடந்தாய்நீ சிங்கி! (எங்கே நடந்தாய் நீ)

கொத்தார் குழலார்க்கு வித்தாரமாகக்
குறிசொல்லப் போனனடா சிங்கா! (குறி சொல்ல)

பார்க்கில் அதிசயந் தோணுது சொல்லப்
பயமாய் இருக்குதடி சிங்கி (பயமா)

ஆர்க்கும் பயமில்லைத் தோணின காரியம்
அஞ்சாமற் சொல்லடா சிங்கா! (அஞ்சா)

காலுக்கு மேலே பெரிய விரியன்
கடித்துக் கிடப்பானேன் சிங்கி (கடித்து)

சேலத்து நாட்டிற் குறிசொல்லிப் பெற்ற
சிலம்பு கிடக்குதடா சிங்கா (சிலம்பு)

சேலத்தார் இட்ட சிலம்புக்க மேலே
திருகு முறுக்கென்னடி சிங்கி! (திருகு)

கோலத்து நாட்டார் முறுக்கிட்ட தண்டை
கொடுத்த வரிசையடா சிங்கா! (கொடுத்த)

நீண்டு குறுகியும் நாங்கூழுப் போல
தெளிந்த தெளிவென்னடி சிங்கி! (தெளிந்த)

பாண்டிய னார்மகள் வேண்டும் குறிக்காகப்
பாடக மிட்டதடா சிங்கா! (பாடக)

மாண்ட தவளைஉன் காலிலே கட்டிய
மார்க்கம தேது பெண்ணே சிங்கி! (மார்க்)

ஆண்டவர் குற்றாலர் சந்நிதிப்பெண்கள்
அணிமணிக் கெச்சமடா சிங்கா! (அணிமணி)

சுண்டு விரலிலே குண்டலப்பூச்சி
சுருண்டு கிடப்பானேன் சிங்கி! (சுருண்டு)

கண்டிய தேசத்திற் பண்டுநான் பெற்ற
காலாழி பீலி அடா சிங்கா! (காலாழி)

மெல்லிய பூந்தொடை வாழைக் குருத்தை
விரித்து மடித்ததார் சிங்கி! (விரித்து)

நெல்வேலி யார்தந்த சல்லாச் சேலை
நெறிபிடித் துடுத்தினேன் சிங்கா! (நெறிபிடி)

ஊருக்கு மேக்கே உயர்ந்த அரசிலே
சாரைப் பாம்பேது பெண்ணே சிங்கி! (சாரை)

சீர்பெற்ற சோழன் குமாரத்தி யார்தந்த
செம்பொன் அரைஞாணடா சிங்கா! (செம்பொன்)

மார்பிற்கு மேலே புடைத்த சிலந்தியில்
கொப்புளம் கொள்வானென் சிங்கி! (கொப்பு)

பாருக்குள் ஏற்றமாம் காயலார் தந்த
பாரமுத் தாரமடா சிங்கா! (பார)

எட்டுப் பறவை குமுறும் கமுகிலே
பத்தெட்டுப் பாம்பேதடி சிங்கி! (பத்தெ)

குட்டத்து நாட்டாரும் காயங் குளத்தாரும்
இட்ட சவடியடா சிங்கா! (இட்ட)

## பாடல் - 5

### புரட்சிக்கவி - பாரதிதாசன்

**நீ**லவான் ஆடைக்குள் உடல் மறைத்து
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தை!
கோலமுழுதும் காட்டிவிட்டால் காதற்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ? வானச்
சோலையிலே பூத்ததனிப்பூவோ? நீதான்!
சொக்க வெள்ளிப் பாற்குடமோ அமுத ஊற்றோ!
காலை வந்த செம்பரிதி கடலில் மூழ்கிக்
கனல் மாறிக் குளிரடைந்த ஒளிப்பிழம்போ!

**அ**ந்தியிருளால் கருகும் உலகு கண்டேன்
அவ்வாறே வான் கண்டேன் திசைகள் கண்டேன்
பிந்தியந்தக் காரிருள் தான் சிரித்த துண்டோ?
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவோ நீதான்?
சிந்தாமல் சிதறாமல் அழகையெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென்றே இயற்கை அன்னை வானில்
எழில் வாழ்வைச் சித்தரித்த வண்ணந்தானோ!

**உ**னைக்காணும் போதினிலே என்னுளத்தில்
ஊறிவரும் உணர்ச்சியினை எழுதுவதற்கு
நினைத்தாலும் வார்த்தை கிடைத்திடுவதில்லை
நித்திய தரித்திரராய் உழைத்துழைத்துத்
தினைத்துனையும் பயனின்றி பசித்த மக்கள்
சிறிது கூழ் தேடுங்கால், பானை ஆரக்
கன்த்திருந்த வெண்சோறு காணும் இன்பம்
கவின் நிலவே உனைக் காணும் இன்பம்தானோ!

**உ**ன்னை உன் திருவிழியாற் காணுகின்றேன்
ஒளிபெறுகின்றேன் இருளை ஒதுக்குகிறேன்
இன்னலெல்லாம் தவிர்க்கின்றேன்
களிகொள்கின்றேன்
எரிவில்லை குளிர்கின்றேன் புறமும் உள்ளும்
அன்புள்ளம் பூணுகின்றேன் அதுவு முற்றி
ஆகாயம் அளாவுமொரு காதல் கொண்டேன்!
இன்பமெனும் பால் நுரையே குளிர்விளக்கே!
எனை இழந்தேன் உன்னெழிலில் கலந்ததாலே

## பாடல் - 6

### மீன் கொத்தி

வானவில்லின் வயிற்றில் பிறந்தனை;
வண்ணவல்லி அவள்தன் எழில்எலாம்
ஈன்றபோது உனக்களித்தனள்; அவளைமுன்
ஈன்றவள் வான் மழைக்கண்புனல் ஆதலின்
ஆன்ற தனிமையில் ஆழ்ந்திடும் பொய்கையும்
அருகில் நின்று அழுது அரற்றும் மரங்களும்
ஊன்றி அவைதமோடு உறவு கொள்வது உன்
உதிரந்தன்னுடன் உதித்த பண்பாகிடும்.
என்னினும் சுடர் வண்ணம் படைத்தநீ
எதற்கோ தனிக்காட்டில் ஒளிப்பது?
மின்னுகின்ற தோகை மயிலுடன்
மேவி அரண்மனைக் காவில் உலாவலாம்
நந்தவனக் கண்ணாடியாய் நீண்டபுல்
நளினமார்பில் உன்நீலம் பதிக்கலாம்;
பின்னுங் கிளையினில் ஏறியே உன்சிறைப்
பேற்றை அரசரும் போற்ற விரிக்கலாம்.
உன்தன் பெருமை பாராட்ட மறுத்தனை;
ஓங்கு பேராசை அனைத்தும் ஒதுக்கினை;
உன்தனைப் போலிவ் வேழையும் அமைதிசூழ
ஓரிடம் வேண்டுவன், பறவையே யாருமே
வந்திடாத பச்சைப் பசும் பொழில்;
வளருந்தனிமையில் ஆழும் சிறுசுனை;
எந்த நேரமும் என்னைத் தன் மார்பினில்
எடுத்தணைத்தே நெடுமூச்செறி ஓர்மரம்.

– வில்லியம் ஹென்ரி டேவிஸ்
– தமிழில் அ. சீநிவாசராகவன்

## சொல்லாட்சி

சொற்களில் கூர்மை, தெளிவு, அழகு, உணர்வு ஆகியன பொருந்தத் தேர்ந்தெடுத்துப் பயன் படுத்துகிறார். இது இவரது தனித்தன்மை சில இடங்களில் புதிய சொற்களையே உருவாக்கு கிறார்.

கவிதைகளுக்குத் தலைப்பு இடுவதிலேயே சொல்லாட்சித்திறன் காணப்படுகிறது. பால் வீதி என்பது பல ஆயிரம் நட்சத்திரங்களால் ஆன அண்டவெளி வீதி. இது ஒரு வெளிச்சப் பாதையைப்போல விளங்குகிறது. இதனால் வானநூல் வல்லுநர் இதற்கு இப்பெயர் இட்டனர். இப்பெயரையே கவிதைத் தொகுதிக்கு இட்டிருக்கிறார்.

சிறந்த கவிஞன்
தன் உள்ளத்தில் உணர்ந்ததை,
தன் கவிதையின் வழியாக
படிப்பவரின் உள்ளத்திற்கு
இடமாற்றம் செய்கின்றான். சிறிதளவு
கூட அது சிந்திவிடாமல் சிதறிவிடாமல்
சென்று சேர வேண்டுமே என்று கவனம்
எடுத்துக் கொள்கிறான். அதற்காகப்
பொருத்தமான சொல்லைத்
தேர்ந்தெடுக்கிறான். உவமை உருவகம்
போன்ற கலைத் திறன் உத்திகளைக்
கையாளுகிறான்.
அப்துல் ரகுமான் கையாளும்
தனித்தன்மைகள் கொண்ட
கலைத்திறன்கள்

## படிமம், குறியீடு, தொன்மம்

சொற்களால் நெஞ்சத்திரையில் வரையும் ஓவியம்தான் படிமம் என்பது. வெறும் வருணனை கூடப் படிமம்தான். ஆனாலும் உவமை, உருவகம், தொன்மம் அடங்கிய சொற்களால் உருவாக்கப்படும் சொல் ஓவியம் சிறந்த படிமமாகும். உணர்வை மிகுதியாகத் தூண்டும், பலபொருள் தரும் சுவை ஊற்றாகும். இயக்கம் உள்ள ஓவியமாக உயிருடன் விளங்கும். அப்துல் ரகுமானின் கவிதைகளில் இத்தகைய படிமங்களையே மிகுதியாகக் காண்கிறோம். பால் வீதி நூலில் உள்ள சாவி இருக்கும் வரை என்ற கவிதை,

ஞாபக முட்கள்
காயங்களைச் சுட்டி
வட்டமிடும்
என் ஏகாந்தத்தின்
இதயத் துடிப்பாகப்
பிரிந்து சென்ற உன்
காலடி ஓசை

**தொன்மம்**

புராணம், பழங்கதைகள் இவற்றில் வரும் பாத்திரங்களோ, நிகழ்வுகளோ கவிதையில் ஓரிரு வார்த்தைகளில் சுட்டிக் காட்டப்படும். இவ்வாறு சுட்டினால் பக்கம் பக்கமாக விவரிக்க வேண்டிய தேவையே இல்லாமல், சொல்ல வந்த கருத்தை அது உணர்வோடு விளக்கிவிடும். இதனால் உலகெங்கும் சிறந்த கவிஞர்கள் இந்தக் கலைத்திறனை விரும்பிக் கையாளு கின்றனர். இது தொன்மம் எனப்படுகிறது.

இக்கவிதை பிரிந்து சென்ற காதலியின் காலடி ஓசையைப் பற்றியது. பிரிந்து சென்ற பின் நினைவெல்லாம் அந்தக் காலடி ஓசைதான் தனிமையின் இதயத் துடிப்பாகிறது. மனமே ஒரு கடிகாரமாகி விடுகிறது. குத்தி, உறுத்தி, துளைத்துக் கொண்டே இருக்கும் ஞாபகங்கள் (துயர நினைவுகள்) அதன் முட்கள், நெஞ்சின் புண்கள் தாம். நேரம் காட்டும் எண்கள் நினைவு முட்கள் காயங்களின் மேல் வட்டமிட்டு வலியை மேலும் மிகுதிப்படுத்துகின்றன. இந்த வலி துன்பம் எது வரை? கடிகாரம் ஓடும் வரை! கடிகாரம் எதுவரை ஓடும்?
சாவி இருக்கும் வரை!

பிரிவின் வலிமையை வரைந்து காட்டும் படிமம் இது. (ஒன்றைக் கூறி அது உணர்த்தும் பொருளைக் கேட்கும் பலன் கற்பனைக்கே விட்டுவிடுவது படிமம்)
படிமம், குறியீடு ஆகியவற்றைப் பற்றிய ஆய்வையே தம் முனைவர் பட்ட ஆய்வேடாக அளித்துப் பட்டம் பெற்றவர் கவிக்கோ அப்துல் ரகுமான். காட்டைப் பற்றிப் பேசும் அவருடைய ஒரு வரிதான்,

"முடிவெட்டிக் கொள்ளாத பூங்கா"

புறத்திணைச் சுயம்பர மண்டபத்தில்
போலி நலன்களின் கூட்டம்
கையில் மாலையுடன்
குருட்டுத் தமயந்தி
- அப்துல் ரகுமான் - பால்வீதி
சுயம்பர மண்டபம் - தேர்தல் களம்
போலி நலன்கள் - அரசியல் தலைவர்கள்
குருட்டுத் தமயந்தி - வாக்காளர்

## படிமம்

ஒரு விரிந்த காட்சியைச் சுருக்கமான சொற்களுக்குள் கொண்டு வரும் முயற்சியே படிமம் ஆகும். படிமத்தில் கற்பனையின் விரிவும் சொற்செட்டும் இன்றியமையாதவை. படிமம் உத்தி என்பது உணர்வும் அறிவும் இணைந்து உருவாக்கும் மனக்காட்சியாகும். உருவகம் அல்லது குறியீட்டின் துணைகொண்டு நம் கற்பனைத் திறனால் விரியுமொரு மனக்காட்சி இது.

புறா, அமைதியைக் குறிக்க வரும்போது குறியீடாகிறது. மகாத்மா, பல்வேறு உயர்பண்புகளைப் பல படிநிலைகளில் கொண்ட ஒரு நபரைக் குறிக்க வரும்போது படிமமாகிறது. இதற்கு அப்துல்ரகுமானின் வியட்நாம் என்ற கவிதை சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும்.

சொற்களால் நெஞ்சத்தில் வரையும் ஓவியந்தான் படிமம் என்பதற்கு பின்வரும் படிமக் கவிதைகள் தமிழில் தித்திப்பை மேம்படுத்துகின்றன.

"முதுமை
நிமிஷக் கறையால்
அரித்த ஏடு
இறந்த காலத்தையே பாடும்
கீறல் விழுந்த இசைத்தட்டு
ஞாபகங்களின் குப்பைக்கூடை
வியாதிகளின்
மேய்ச்சல் நிலம்"
- அப்துல் ரகுமான்

"நட்சத்திரங்கள்
இரவும் பகலும்
எதிர்எதிர் மோதிட
உடைந்த பகலின்
துண்டுகள்"
- தமிழன்பன்

"அக்கம் பக்கம்
வசந்தமில்லை
சோகத்தோடு
அமர்ந்திருக்கிறது
சவத்தின் மீது
வண்ணத்துப்பூச்சி"
- வானம்பாடி. 9

**அக்கினிக்குஞ்சு**

அக்கினிக்குஞ்சொன்று கண்டேன் - அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்;
வெந்து தணிந்தது காடு; - தழல்
வீரத்திற் குஞ்சென்று மூப்பென்று முண்டோ?
தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்

பாரதி பயன்படுத்தும் அக்கினிக்குஞ்சு என்ற சொற்றொடரே ஒரு படிமம் தான்.

## குறியீடு

திருமணத்துக்கு முயற்சி செய்யாது இரவுக் குறியில் வந்து போகும் தலைவனிடம் தோழி இவளை நீ விரைவில் மணம் புரிந்து கொள்ளாவிடில் இவள் இறந்து போய்விடுவாள். களவிலே இயல்பாக உள்ள பிரிவை இவளால் தாங்க முடியாது. இவளது உயிர்த்திறன் மென்மையானது. இவளது காதல் திறமோ மிக்க வலிவுடையது என்று எச்சரிக்கிறாள். தலைவியின் நிலைக்கு அழகியதொரு உதாரணமும் தருவாள். மலையில் பழுக்கும் பலாப்பழம் கனம் மிகுந்து போகும் காலை அதன் மென்மையான காம்பில் தங்காது முறித்துக் கொண்டு கீழே விழும். யாருக்கும் பயன்படாது வீணாகிப் போகும். தலைவியின் உயிர்த்திறன் பலாப்பழத்தின் காம்பு என்றால் அவளது காதலே அக்கனி. இத்தகைய அழகிய பொருத்தம் மிக்க உவமையைக் கூறித் தோழி தலைவனைத் தூண்டும் பாடல். இதனைக் குறியீடாகக் கொள்ளலாம்.

## உள்ளுறை

இணைபிரியா இயல்புடையது வங்கா எனும் பறவை. ஆணும் பெண்ணும் இணைபிரியா மல் இணைந்துவாழும். அதனைத் தலைவன் – தலைவி அன்பிற்கு இணையாகக் கூறுவர்.

ஏதோ காரணத்தில் ஓர் ஆண் வங்காப் பறவை தன் துணையைப் பிரிய நேர்கிறது. அதனால் தனிமைப்பட்டுப்போன பெண் பறவையினை இறையாகக்கொள்ள வல்லூறு ஒன்று நெருஞ் கிவந்து வருத்துகிறது. இதனால் அஞ்சி ஒடுங் கிய பெண் பறவை தன் இணையை நினைத்து, புல்லாங்குழல் போன்ற தன் இனிய குரலால் ஒலி எழுப்புகிறது.

மலைகளை உடைய அரியவழியைக் கடந்து செல்வது கடினம் என்று கருதாமல், தலைவி தன் வீட்டிலிருக்கப் பொருள் தேடி வருவேன் என்று துணிவது இனிமைக்கு இறுதியாகும்.

இப்பாடலில் அமைந்திருக்கும் உள்ளுறை பற்றி சுருக்கமாகச் சொல்வோம்.

| கருப்பொருள் | உள்ளுறை |
|---|---|
| 1. வங்காச்சேவல் | தலைவன் |
| 2. வங்காப்பேடை | தலைவி |
| 3. வல்லூறு | கனவினால் விளையும் இடங்கள் |
| 4. கணவர்கானம் | தலைவனை விரைந்து எய்தாமை |
| 5. வங்காப்பேடை குழலிசை போல் ஆகுதல் | தலைவி பிரிவினை ஆற்றாமல் புலம்புதல் |

### கறுப்பு வானவில்

பழைய பூமியைக் காணவில்லை அந்தப்
பசுமையை யாரும் பேணவில்லை
செடிகொடி மரத்தை உடைத்து உடைத்துக்
கறுப்பாய் ஆக்கினோம்
வானவில்லை
பூமிச் சூட்டை அதிகரித்தோம் அந்த
ஓஸோன் திரையை அபகரித்தோம்
காற்றின் கருவைச் சிதைத்துச் சிதைத்து
ஆக்ஸிஜன் முகத்தைக் கருக வைத்தோம்
வயல் வெளி சோலை மழிக்கின்றோம் அங்கு
கான்க்ரீட் காடுகள் வளர்க்கின்றோம்
அறுவடைப் பொழுதில் பசித்துப் பசித்து
வெறுமைக் குதிரில் பிழைக்கின்றோம்.
அருவியும் ஆறும் தூர்த்து விட்டோம் நம்
வேர்வையைக் குடிக்கச் சேர்த்துவிட்டோம்
நிலத்தடி நீரை உறிஞ்சி உறிஞ்சி
மழைக்கும் தாகம் வார்த்து விட்டோம்
புழுவாய் மக்கள் ஈனுகிறோம் நாம்
பொறாமையை மட்டும் பேணுகிறோம்
சோற்றுப் பருக்கையைப் பதுக்கிப் பதுக்கி
நரகல நாயாய் நாணுகிறோம்
சந்ததி மண்ணை ஏய்த்துவிட்டோம் சுடு
காடென பூமியைத் தீய்த்துவிட்டோம்
மதத்தை மட்டும் வளர்த்து வளர்த்து
மனிதத்துவத்தைச் சாய்த்து விட்டோம்
இனியும் இப்படி இருந்திடவா? துளி
ஈரம் இல்லாமல் இறந்திடவா?
பூமியின் பொக்கிஷம் உணர்ந்து ணர்ந்து
அரக்கத் தனத்தைத் துறந்திடவா.

– ஆண்டாள் பிரிய தர்ஷினி

### பல்வேறு சுவைகளில் அமைந்த கவிதைகள்

எடும் எடும் எடும்என எடுத்தோர்
இகல்ஒலி கடல்ஒலி இகக்கவே
விடுவிடுவிடு பரிகரிக்குழாம்
விடும்விடும் எனும் ஒலி மிகைக்கவே

– கலிங்கத்துப்பரணி

ஈட்டு புகழ் நந்திபாணா! நீ எங்கையர்தம்
வீட்டிருந்து பாடவிடிவளவும் – காட்டிலமும்
பேயென்றாள் அன்னை; பிறர் நரியென்றார்; தோழி
நாயென்றாள் நீயென்றேன் நான்.

– நந்திக்கலம்பகம்

நீ முதல் முறை என்னைத் தலைசாய்த்துக்
கடைக்கண்ணால் பார்த்தபோது
என் உள்ளத்தில் முள் பாய்ந்தது
அதை இன்னும் எடுக்கவில்லை
எங்கே இன்னொரு முறை பார்
முள்ளை முள்ளால் தானே
எடுக்கவேண்டும்.

– மு. மேத்தா

அலகு 2

# விரல் நுனியில் உலகம்

**கால அளவு : 35 மணிநேரம்**

## அலகு அறிமுகம்

கைக்குள் அடங்கிய உலகம் விரல் நுனிக்கே வந்துவிட்டது. இணையத்தின் வளர்ச்சி கண்டு இமைக்க மறந்து நிற்கிறது உலகம். கண்மூடித் திறப்பதற்குள் கண்முன் வந்து நிற்கிறது உலகம். முன்னோர் கண்ட கனவெல்லாம் நம்முன்னே வந்து கைகட்டி நிற்கிறது. பழங்கால மந்திரதந்திர மாயா ஜாலக் கதைகள் எல்லாம் அப்படியே அல்லது அதைவிட ஒருபடிமேலாகவே கண்டு களிக்க இக்கால அறிவியல் வழியமைத்துத் தந்துள்ளது. தகவல் தொழில்நுட்ப ஊடகத் துறைகளில் உலகம் பெற்றிருக்கும் வளர்ச்சியால் விளைந்திடும் நன்மைகள் பலவாகும்.

இணையதளமும் வலைப்பூக்களும் சிறப்பாக மின்னியல் ஊடகங்களும் இலக்கிய வளர்ச் சிக்கும் வாசிப்புக்கும் பெரிதும் உதவுகின்றன. முகநூல் வாயிலாக அவரவர் திறமைகளை வெளிப்படுத்துவதுடன் அரிய தகவல்களும் அறிந்திட முடிகிறது. டுவிற்றர் மூலம் செய்திகள் குறுஞ்செய்திகளாக மின்னல் வேகத்தில் பரவுகின்றன. வருங்காலத்தில் புத்தகங்களின் இடம் கேள்விக்குறியாகிவிடும். எல்லாம் எல்லாமுமாக இணைய உலகம் அனைவருக்கும் உதவப் போவது உறுதி.

இணையத்தாலும் அது தொடர்பான அத்தனை கருவிகளாலும் ஆயிரமாயிரம் நன்மைகள் விளைந்தபோதும் தீமைகளும் விளைகின்றன. கடவுளும் சாத்தானும் காலமெலாம் இருப்பது போல நன்மையும் தீமையும் காலமெலாம் இருக்கத்தான் வேண்டுமா? விரல்நுனியில் உலகம் வந்த பின்பும் தீமைகள் விளையலாமா? கணினி மயமான இக்காலத்தில் கணினியக் குற்றங்களும் (Cyber Crimes) வந்துவிட்டனவே! விமலாதித்த மாமல்லன் எழுதிய இணையமும் இலக்கியமும் என்ற கட்டுரையும் அப்பாடப் பகுதியில் வரும் பெட்டிச் செய்திகளும் மீண்டும் மீண்டும் வாசித்துப் புரிந்துகொள்ளும் முறையில் எழுதப்பட்டுள்ளன.

இரண்டாம் அலகில் வரும் இரண்டாவது பாடப்பகுதி ‘பச்சைவயல்’ திரைப்படமாக எடுப்பதற்கு ஏற்றவாறு எழுதப்பட்ட திரைக் கதை வசனத்துடன் அமைந்த நூலிலிருந்து எடுக்கப்பட்ட சிறுபகுதி.

திரைக்கதை எவ்வாறு அமைக்கப்பட வேண்டும், வசனம் எவ்வாறு எழுதப்பட வேண்டும் என்பதைப் புரிந்துகொள்ள இப்பகுதி மிகவும் உதவும். நாடகக்கதை வசன அமைப்புக்கும் திரைப்படக்கதை வசன அமைப்புக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை உணரவும் இது உதவும்

பல நாவல்களைப் படைத்துள்ள எழுத்தாளர் மகரிஷியின் புவனா ஒரு கேள்விக்குறி, வட்டத்துள் சதுரம் போன்றவை திரைப்படங் களாகவும் வெளிவந்துள்ளன. சேலத்தைச் சேர்ந்த இவருடைய இயற்பெயர் பாலசுப்பிரமணியன்.

பார்வையாளர்களின் நெஞ்சில் அதிர்வலை களை ஏற்படுத்திய திரைப்படம் தங்கமீன்கள். விருதுபெற்ற திரைப்படம். அதைப்பற்றிய ஒரு விமர்சனம் ‘பரிசுத்த அன்பில் நீந்தும் மீன்கள்’ எனும் அருமையான கட்டுரை. திரு. என். செல்லப்பாவின் இக்கட்டுரை திரைப்பட புரிதலுக்கும் ரசனைக்குமுரிய பாடமாக அமைந்துள்ளது.

திரையுலகைத் தமிழ்த்திரைப்படத்தின் பக்கம் திரும்பப் பார்க்க வைத்தவர் இயக்குநர், ஒளிப்பதிவாளர், கதைவசனகர்த்தா, நடிகர் எனப் பன்முகத் திறன்களைக் கொண்ட திரைப்படக் கலைஞர் பாலுமகேந்திரா. இலங்கை மட்டகளப்பு அருகே பிறந்தவர். ஒளிப்பதிவு கலைஞராகி முதன்முதலில் மலையாளத் திரைப்படமான பிரபல இயக்குநர் ராமுகாரியாட்டின் ‘நெல்லு படத்தில் பணியாற்றி, முதல் படத்திலேயே சிறந்த ஒளிப்பதிவாளருக்கான மாநில விருது பெற்றவர். மூன்றாம் பிறை, மூடுபனி, வீடு, அழியாத கோலங்கள், சத்தியாகிரகம், நீங்கள் கேட்டவை எனப் பல்வேறு படங்களில் பணிபுரிந்து மாநில, தேசிய விருதுகளை வென்றவர்அவரது பட்டறையில் உருவாகி வெளிவந்த கடைசிப் படமான தலைமுறையில் அவர் இறந்து போவார். படத்தில் மட்டுமல்ல உண்மை யாகவே படம் வெளிவந்த சில மாதங்களிலேயே (2013-இல்) மறைந்துபோனார். தமிழ், மலையளம், கன்னடம், தெலுங்கு உட்பட்ட தென்னிந்தியத் திரையுலகமே கண்ணீர் வடித்தது. அவருடைய நேர்காணல் நம் அகவிழியைத் திறந்து திரைப்பட அறிவுக்கு வழிவகுக்கிறது

## கற்றல் அடைவுகள்

- நாடகம், திரைப்படம் ஆகியவற்றுக்கு விமர்சனக் குறிப்பு எழுதுகிறார்கள்.
- குறும்படம் தயாரிக்கிறார்கள்.
- மின் ஊடகங்களின் பயன்பாடு குறித்துக் கட்டுரை தயாரிக்கிறார்கள்.
- மின் ஊடகங்கள் தொடர்பான கட்டுரைகள், தகவல்களை மொழிமாற்றம் செய்கிறார்கள்.

## மதிப்புகளும் மனப்பாங்குகளும்

- திரைப்படங்களை ரசிப்பதற்கான மனநிலை.
- சமூகத் தீமைகளுக்கு எதிராகப் போராடும் திறன்.
- குடும்ப உறவுகளின் முக்கியத்துவம்.
- இணையம், இணையம் சார்ந்த ஊடகங்களைப் பெருத்தமான சூழலில் பயன்படுத்தும் திறன்.
- மாற்றுத்திறனாளி மாணவர்களை அங்கீகரிக்கவும் ஏற்றுக்கொள்வதற்குமான மனநிலை.

## கற்றல் கருவிகள்

- பாடநூல்
- திரைப்படங்கள்
- இணையம்
- திரைப்படப் பாடல்கள்
- திரைக்கதை வசனங்கள்
- திரைக்கதை விமர்சனங்கள்
- குறுந்தகடு

அலகுச்சட்டகம்

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடு/செயல்முறை/மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| • பழங்காலத்தில் உள்ள செய்தித் தொடர்புகளும் இன்றைய செய்தித் தொடர்புகளும். | **கலந்துரையாடல் (நுழைவுச்செயல்பாடு)**<br>ஆசிரியரும் மாணவர்களும் பொதுக்கலந்துரையாடல் நடத்துகிறார்கள். கீழ்வரும் வினாக்களின் அடிப் படையில்,<br>• மிகத்தொலைவில் உள்ளவர்களையும் அண்மைப் படுத்துவது எது?<br>• எழுத்து மூலமா?<br>• விரைவில் செய்தி சென்றடைந்ததா?<br>• இன்று எவ்வாறு செய்திகள் அனுப்பப்படுகின்றன?<br>இவ்வினாக்களின் அடிப்படையில் கலந்துரையாடலின் கருத்துகளை ஆசிரியர் தொகுத்து வழங்குகிறார்.<br>• ஓலைகள் மூலம் செய்திகள் அனுப்பப்பட்டன.<br>• புறா, குதிரை போன்ற பறவை, விலங்குகள் பயன் படுத்தப்பட்டன.<br>• செய்திகள் மெதுவாகச் சென்றடைந்தன.<br>• இன்று வெகு விரைவில் செய்திகள் பரவுகின்றன.<br>• இணையம் மூலம் உலகின் எந்த மூலையில் உள்ளவர்களுடனும் தொடர்பு கொள்ள முடியும். | |
| • சமூக அநீதிகளுக்கு எதிராகச் செயல்படும் திறன் | **குழுக் கலந்துரையாடல்**<br>தொடர்ந்து குழுக்கலந்துரையாடல் நடைபெற வேண்டும்.<br>• கல்வியில் இணையத்தின் பங்கு<br>• நன்மை தீமைகள் • இணையம் முன்னுரை<br>• இணையத்தின் சரியான பயன்பாடு<br>• சைபர் க்ரைம் • வலைப்பூ<br>• வலைப்பூ உருவாக்கம் | இணையத்தின் பயன்பாடு சைபர் க்ரைம் வலைப்பூக்கள் ஆகியவை குறித்துக் குறிப்புகள் தயாரிக்கிறார்கள். |

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடு/செயல்முறை/மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
| --- | --- | --- |
| • நாடகம் திரைப்படம் கலை, பண்பாடு ஆகியவை இலக்கியத்தரம் வாய்ந்தவை. | கருத்துகளை ஆசிரியர் தொகுத்து வழங்க வேண்டும். மாணவர்கள் மேற்கூறியவற்றைக் குறிப்பாக எழுது கிறார்கள். மாணவர்களே அவற்றைச் சுயமதிப்பீடு செய்ய வேண்டும்.<br>பாடவிளக்கம்.<br>**பட்டிமன்றம் நடத்துதல்**<br>பாடப்பகுதியை வாசிக்கிறார்கள். கலந்துரையாடல் நடத்துகிறார்கள். இணையம் நன்மையா? தீமையா? என்பது குறித்த கருத்துகளை இரு குழுக்களும் கருத்துகளை எழுதித் தயாரிக்க வேண்டும்.<br>• மதிப்பீடு • சுயமதிப்பீடு<br>• குழு மதிப்பீடு • ஆசிரியர் மதிப்பீடு<br>பட்டிமன்றக் குறிப்புகளை எழுதுகிறார்கள்.<br>**திரைக்கதை நாடகம் குறிப்பு தயாரித்தல்**<br>(குறும்படம் காட்டுதல்) கலந்துரையாடல். மாணவர்கள் அதை விமர்சனம் செய்து குறிப்பு எழுதுகிறார்கள்.<br>பச்சைவயல் பாடப்பகுதியை வாசிக்கிறார்கள்.<br>**பாடவிளக்கம்**<br>ஆசிரியர் விளக்கம் அளித்தல்.<br>திரைப்படம், நாடகம் என்பவை பற்றிய குறிப்பு எழுதுகிறார்கள். ஆசிரியர் அதனை மதிப்பிடுகிறார். குறிப்பில் எல்லாக் கருத்துகளும் அடங்கியுள்ளன என்பதை உறுதி செய்தல் வேண்டும். | இணையம் நன்மையா? தீமையா? என்பது குறித்துப் பட்டிமன்றக் குறிப்புகள் தயாரிக்கிறார்கள்.<br><br>திரைக்கதை நாடகம் ஆகியவற்றின் சிறப்புகள் குறித்துக் குறிப்பு எழுது கிறார்கள். |

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடு/செயல்முறை/மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
| --- | --- | --- |
| ● திரைப்படங்கள் மனித உறவுகளின் சிக்கல்களையும் சமூகச் சிக்கல்களையும் வெளிக்காட்டுகின்றன. | **திரைக்கதை வசனம் எழுதுதல்.**<br>மாணவர்கள் எழுதிய குறிப்புகளின் துணை கொண்டு குழுக்கலந்துரையாடல்<br>● நாடகத்தின் கூறுகள்<br>● திரைப்படத்தின் சிறப்புகள்<br>நாடகத்தின் சிறப்புகளைப் பற்றிக் குறிப்புகள் தயாரிக்கிறார்கள். நாடகம், திரைப்படம் இரண்டின் வேறுபாடு என்ன?<br>**மதிப்பீடு**<br>மாணவர்கள் சுயமதிப்பீடு செய்யும் போது நாடகம் / திரைப்படத்தின் கூறுகளை எழுதி அவற்றுள் எல்லா கருத்துகளும் இடம் பெற்றுள்ளன என்பதை உறுதி செய்தல் வேண்டும்.<br>**ஆசிரியர் மதிப்பீடு**<br>மாணவர்கள் எழுதிய பட்டியலை ஆசிரியர் மதிப்பிட வேண்டும்.<br>இடம்பெற வேண்டிய கருத்துகள் பார்க்க அலகு விளக்கம். | திரைக்கதை வசனம் எழுதுகிறார்கள்<br>நாடகம், திரைப்படத்தின் வேறுபாடு காணப்பட்டியலிடுகிறார்கள்.<br><br>திரைப்பத்தை விமர்சனம் செய்து விமர்சனக் குறிப்பு எழுதுகிறார்கள். |
| ● திரைப்படம் நுட்பமான உணர்வுகளையும் வெளிப்படுத்துகிறது. | **திரைப்பட விமர்சனம் செய்தல்**<br>தங்கமீன்கள் திரைப்படம் காட்டுதல் மாணவர்கள் படம் பார்த்த பின் திரைப்படம் குறித்துக் கலந்துரையாடு கிறார்கள். | திரைக்கதை வசனம் எழுதிக் குறும்படம் தயாரிக்கிறார்கள். |

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடு/செயல்முறை/மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| | ● திரைப்படத்தின் கதை ● காட்சி அமைப்பு<br>● பாடல் ● ஒலி ஒளி அமைப்பு<br>இவைப்பற்றி விவாதித்துக் குறிப்புகள் தயாரித்தல் தொடர்ந்து அவர்கள் பார்த்து ரசித்த ஏதேனும் ஒரு திரைப்படத்தை விமர்சனம் செய்கிறார்கள்.<br>● திரைக்கதை ● வசனம்<br>● பாடல் ● காட்சி அமைப்பு<br>● ஒலி ஒளி அமைப்பு ● இயக்கம்<br>மாணவர்கள் திரைப்படத்திற்கான விமர்சனக் குறிப்பு எழுதுகிறார்கள்.<br>**ஆசிரியர் மதிப்பீடு**<br>விமர்சனக் குறிப்பில் இடம் பெற வேண்டிய கருத்துகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்ய வேண்டும். (பார்க்க அலகு விளக்கம்)<br>என்னென்ன சமூகப் பிரச்சினைகளைத் திரைப்படம் வெளிக்காட்டுகின்றன?<br>சமூகப் பிரச்சினைகளை ஆசிரியர் விளக்குகிறார். மாணவர்கள் திரைக்கதை, வசனம், காட்சி அமைப்பு, காட்சி விளக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு கதையைத் தேர்வு செய்து திரைக்கதை வசனம் எழுதுகிறார்கள். எழுதிய திரைக்கதையைக் குறும் படமாகத் தயாரிக்கிறார்கள்.<br>● குறும்படம் ● குழு மதிப்பீடு<br>● ஆசிரியர் மதிப்பீடு | |

## அலகுப் பகுப்பாய்வு

**கலந்துரையாடல்**

**(நுழைவுச் செயல்பாடு)**

- பண்டைக்காலத்தில் தொலைவில் உள்ளவர்களுடன் எவ்வாறு தொடர்பு கொண்டனர்?
- எழுத்து மூலமா?
- பண்டைய தொடர்புச் சாதனங்கள் எவை?

இவ்வினாக்களின் வழியாகக் கலந்துரையாடி ஆசிரியர் கருத்துளைத் தொகுத்து வழங்க வேண்டும்.

- ஓலைகள்
- புறா / குதிரை
- பறை
- இசை
- திருமுகங்கள்
- முரசு
- வானொலி
- தொலைக்காட்சி
- கணினி
- இணையம்

- தொலைபேசி - தொலைக்காட்சி - கணினி - இணையம்!
- மந்திரதந்திரக் கதைகளில் வரும் மாயாஜாலக் கண்ணாடி போல நிஜத்தில் உதவும் சாதனம் இணையம்
- நொடிப்பொழுதில் தகவல்களைத் தரவல்லது
- துல்லியம் அதன் சிறப்பு
- அலைச்சல், கால விரயம் இல்லை
- கைக்குள் அடங்கிய உலகை விரல்நுனிக்கே கொண்டு வந்துவிட்டது இணையம்
- இணையத்துக்கு நிகர் எதுவுமே இல்லை என்ற நிலை வந்துவிட்டது
- இணையத்தின் பயன்பாடுகளை அலசுதல்

**குழுக் கலந்துரையாடல்**

இன்றைய தகவல் தொடர்பு சாதனமான இணையத்தின் பயன்பாடு குறித்த கலந்துரையாடல் நடைபெற வேண்டும். பாடப்பகுதியிலுள்ள கட்டுரைகளைப் பயன்படுத்த வேண்டும். ஒவ்வொரு குழுவிற்கும் ஒவ்வொரு தலைப்பில் உள்ள செய்திகளை நகல் ஆக அளித்துக் கலந்துரையாட வேண்டும்.

**மாணவர்கள் பாடப்பகுதியை வாசிக்கிறார்கள்**

**பாடவிளக்கம்**

இணையமும் இலக்கியமும் என்ற பாடப்பகுதி இணையத்திற்கும் இலக்கியத்திற்கும் உள்ள வேறுபாட்டினையும் ஒற்றுமைகளையும் எடுத்துக் கூறுகின்றது. எப்படிச் சிறு பத்திரிகைகள் வணிகத்திற்கு எதிராக சுயேச்சையாகவும் சுதந்திரமாகவும் சுவாசிக்கத் தலைப்பட்டனவோ அதுபோன்றே இணையமும் இன்று சுதந்திரமாக இயங்குகின்றன. இன்று கால நெருக்கடி பக்க நெருக்கடிகள் இல்லாமல் எழுதும் ஒரே இடம் இணையம் எனக் கொள்ளலாம்.

இணையத்தில் முக்காலுக்கும் மேற்பட்டோர் வயதிலும் சரி அனுபவத்திலும் சரி முதிராநிலை வாசகர்களாகவே இருக்கிறார்கள். வேலைச் சூழலின் அபத்தம் காரணமாய் அதிலிருந்து தப்பிக்க இணையத்தைக் கேளிக்கையாகப் பார்ப்பவர்களே அதிகம். டுவிட்டரை ஒவ்வொரு நாளும் பயன்படுத்துவோரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. குறைந்த வரிகளில் எழுதுவதற்கு இன்று அதிக மாணவர்களும் முகநூலையே பயன்படுத்துகிறார்கள். மட்டுமன்றி நிலைச் செய்தி என்னும் குறுஞ்செய்திகளைப் படிப்போரே அதிகம். ஆனால் குறைந்த அளவில் தான் என்றாலும் தீவிர விவாதங்கள் முகநூலில் நடப்பதையும் சுட்டாமல் போவது நியாயமல்ல.

இவ்வாறு இணையத்தில் டுவிட்டரையும் முகநூலையும் பயன்படுத்தும் இன்றயை இளைஞர்கள் விழிப்புணர்வுடன் அவற்றைப் பயன் படுத்த வேண்டும்.

இணையமும் இலக்கியமும் என்ற கட்டுரையுடன், வலைப்பூக்களின் உருவாக்கம், அவற்றின் பயன்பாடு, பயன்படுத்தும் போது கவனிக்க வேண்டியவை, சைபர் குற்றங்கள் ஆகியவற்றையும் குறித்து மாணவர்கள் வாசித்துப் புரிந்து கொள் ளட்டும். விளக்கங்களை ஆசிரியர் எடுத்துக் கூற வேண்டும்.

**இணையத்தின் பயன்பாடு/நன்மைகள்**

- நிகழ்வுகள், நடப்புகள் நேரடியாகக் காட்சிப்படுத்தல்
- உடனுக்குடன் அறிய/தெரிவிக்க வாய்ப்பு
- பதிவு செய்யப்பட்ட அரிய உரை, காட்சி போல்வன தேவைப்படும்போது தேடியெடுத்துக் கேட்கலாம்; பார்க்கலாம்
- அரிய நிகழ்வுகளின் (சுனாமி, பூகம்பம், நிலச்சரிவு, பெருவெள்ளம், எரிமலைக் குமுறல் மற்றும் எதிர்பாராத நிகழ்வுகளின் படக்காட்சிகளைக் காணலாம்.

**வலைப்பூ/முகநூல்**

- இணைய தளம் போன்றே செயல்படக்கூடிய வலைப்பூ (Blogger), முகநூல் (Facebook) வாயிலாகச் செய்திகளைப் பகிர்ந்துகொள்ளலாம்
- தகவல்களைப் பதிவேற்றம் (Upload) பதிவிறக்கம் (Download) செய்யலாம்
- முகநூல் வழியாகச் செய்திகளைக் கொடுத்துப் பிறர் கருத்துகள்/விமர்சனங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

கணினியக் குற்றத்துறை காவலரால் கைது செய்யப்பட்டு வழக்குப் பதிவு செய்தால் என்ன தண்டனை கிடைக்கும்?

- ஐ.டி சட்டம் 2008-ன் படி மூன்று ஆண்டுகள் முதல் ஆயுள்தண்டனை வரை கிடைக்கலாம்.
- ஒரு லட்சம் முதல் ஐந்து லட்சம் வரை அபராதம் விதிக்கலாம்.

**கணினியக்குற்றம் (Cyber Crime)**

- பரிசுச் சீட்டில் (லாட்டரியில்) பரிசு விழுந்துள்ளதாக வசியப்படுத்த வரும் போலி மின்னஞ்சல்கள்
- இணைய தளம் போல தயாரிக்கப்படும் போலி தளங்கள் (Stristring site)
- தீங்கு தரக்கூடிய நச்சுக்கிருமிகள் (வைரஸ்)
- போலியான மென்பொருள்கள்
- ஒரு கணினி நிறுவனத்தின் தரவுகளைத் (Data) திருடுதல்
- ஆபாசப் படக்காட்சிகள் - இவைபோன்ற கணினியில் பல்வேறு குற்றங்கள் உலகெங்கும் பரவிவருகின்றன. ஆதலால் கணினியக் குற்றங்கள் செய்வதால் கிடைக்கும் தண்டனைகள் பற்றிய முன்னறிவு தேவை.

**கணினியக் குற்றம் செய்தவர்கள் பின்வரும் செக்ஷன்களில் கைதானால் ஜாமீன் (Bail - பிணை) கிடைக்காது**

| பிரிவு | - | குற்றம் |
|---|---|---|
| 66 | - | ஹேக்கிங் (ஒருவரின் பலஹீனத்தை முதலெடுத்தல்) |
| 66அ | - | ஆபாசமான குறுஞ்செய்தி |
| 66ஆ | - | கணினி, இணையதளம் வழியாகத் திருடப்பட்டதை வாங்குதல் |
| 67 | - | ஆபாசமாகப் புகைப்படம் எடுத்து வெளியிடுதல் |
| 67அ | - | ஆபாசக் காணொளிக் காட்சிகளை வெளியிடுதல் |
| 67ஆ | - | குழந்தைகள் தொடர்பான ஆபாசப் படங்களை வெளியிடுதல் |

- சுதந்திர எழுத்துக்குக் களம் அமைத்துத் தருவது இணையம்
- பக்க நெருக்கடியோ ஆசாமிகளின் பக்கவாட்டு நெருக்கடியோ கால நெருக்கடியோ இல்லாமல் எழுத ஒரே இடம் இணையம் மட்டுமே
- 140 தட்டல்கள் உடையது இணையம்
- ட்விட்டரில் எழுதப் பணிக்கப்பட்டால் மொழி வெளிப்பாட்டில் கூர்மை வர வாய்ப்புண்டு
- டிவிட்டரில் எழுதினால் உலக கவனத்தை ஈர்க்க முடியும். (எ.டு) தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் சுட்டுக்கொல்லப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து உலக அளவில் எதிரொலித்த டுவிட்டர் குரல்

- இணையப் பயன்பாடு
- வலைப்பூ, முகநூல் உருவாக்கம்
- சைபர் கிரைம்

ஒவ்வொரு தலைப்பிலும் அமைந்த கருத்துகளை வாசித்த மாணவர்கள் தங்கள் கருத்துகளை வெளியிடுகிறார்கள். ஆசிரியர் கொடுக்க வேண்டிய கருத்துகள் இங்கு இடம் பெற்றுள்ளன.
இணையதளத்தில் வலைப்பூ உருவாக்க ஆசிரியர் உதவ வேண்டும்.
குறிப்பாக முக்கியமான கருத்துகளை எடுத்துக் கூற வேண்டும்.

- கணினியக் குற்றம் (சைபர் கிரைம்)
- கணினியக் குற்றவாளிகளுக்கான தண்டனை
- சட்டமுறைகள்

மாணவர்கள் கலந்துரையாடிக் கீழ்வரும் தலைப்புகளில் குறிப்பு எழுதுகிறார்கள். அவற்றை மாணவர்கள் சுயமதிப்பீடு செய்ய வேண்டும்.

| மதிப்பீடு | | |
|---|---|---|
| சுயமதிப்பீட்டுப் படிவம் | | |
| | உண்டு | இல்லை |
| • இணையம் குறித்த செய்திகள்<br>• முகநூல்<br>• வலைப்பூ<br>• சைபர் கிரைம்<br>• சட்டங்கள் | | |

## பட்டிமன்றம் நடத்துதல்

ஆசிரியரின் உதவியுடன் மாணவர்கள் இரு குழுக்களாகப் பட்டிமன்றம் நடத்த வேண்டும். இணையம் நன்மையா? தீமையா? மாணவர்களே பொறுப்பை ஏற்றுச் செயல்படுதல். ஆசிரியர் வழிகாட்ட வேண்டும்.

- அழைப்பிதழ்
- நடுவர்
- குழு
- பட்டிமன்றக் குறிப்புகள்

ஆகியவற்றைக் குறித்து முடிவெடுத்துப் பட்டிமன்றம் நடத்துகிறார்கள். முக்கியமான கருத்துகளை ஆசிரியர் தொகுத்து அளிக்க வேண்டும்.

இணையம்

| இணையம் | |
|---|---|
| **நன்மை** | **தீமை** |
| • பல்வேறு தகவல்களைப் பெறலாம்.<br>• ஐயங்களைத் தீர்க்கலாம்<br>• அரிய நிகழ்வுகள்<br>• படங்கள் / காட்சிகள்<br>• நேரடியாகக் காணலாம். | • தவறாகப் பயன்படுத்துதல்<br>• ஆபாசக்காட்சிகளைப் பார்த்தல்<br>• பாலியல் ரீதியான தொல்லைகள்<br>• போதைப்பொருள் பயன்பாட்டிற்குப் பயன்படுத்துதல் |

*அழைப்பிதழ்* - *நவீன வடிவமைப்புடன் தயாரித்தல் இடம், நாள், தலைவர், வரவேற்பாளர், வாழ்த்துரை, இரு குழுவினர் பெயர்கள், நன்றியுரை, நாட்டுப்பண் உட்பட அனைத்துத் தகவலும் அடங்குதல் வேண்டும்*

*நடுவர் பணி* - *சுவை குன்றாமல் நடத்திச்செல்லுதல்*
*வரம்பு மீறுதலைத் தடுத்தல்*
*விடுபட்ட கருத்துகளை முன்வைத்தல்*
*காய்தல், உவத்தலின்றித் தீர்ப்பு வழங்கல்*

*குழு* - *இரு குழுக்களும் திரட்டியிருக்கும் கருத்துகளைக் கேட்டறிந்து திருத்தல், சேர்ப்புகள் செய்ய ஆசிரியர் தவறக்கூடாது*

*குறிப்புகள்* - *பொருத்தமான, சுவையான கதைகள், நிகழ்வுகள், செய்திகள், படங்கள் திரட்ட உதவுதல்*

மாணவர்கள் பட்டிமன்றக்குறிப்பு தயாரிக்கிறார்கள்.

ஆசிரியர் தொகுத்து வழங்கிய கருத்துகள் இடம் பெற்றுள்ளன என்பதை மாணவர்கள் சுயமாகவும் குழுவாகவும் மதிப்பீடு செய்கிறார்கள். அவற்றை ஆசிரியர் இறுதியில் மதிப்பீடு செய்ய வேண்டும்.

## ஆசிரியர் மதிப்பீடு

ஆசிரியர் மதிப்பிடும் வேளையில் இணையத்தின் நன்மைகள் / தீமைகள் பற்றிய குறிப்புகள் அனைத்தும் அடங்கியுள்ளன என்பதை உறுதிசெய்து பிரதிபலிப்புக் குறிப்பில் பதிவு செய்ய வேண்டும்.

- வடிவம்
- கருத்து
- பங்கேற்பு

## திரைக்கதை நாடகம் குறிப்பு தயாரித்தல்

(குறும்படம் காட்டுதல்) கலந்துரையாடல் மாணவர்கள் அதை விமர்சனம் செய்து குறிப்பு எழுதுகிறார்கள்.
பச்சைவயல் பாடப்பகுதியை வாசிக்கிறார்கள்.

**குறும்படம் தயாரித்தல்**

- கரு (Theme) தீர்மானித்தல்
- திட்டமிடல்
- இடம், பொருள், கலைஞர் தேர்வு செய்தல்
- டிஜிற்றல் காமெரா பயன்படுத்தல்
- படப்பிடிப்பு
- மேம்படுத்தல்

## பாடவிளக்கம்

திரைக்கதை விமர்சனத்திற்குக் கொடுக்கப் பட்டுள்ள பகுதி ஒரு குடும்பத்திலுள்ள சகோதரிகளின் வாழ்க்கையைப் பிரதி பலிக்கின்றது. ஊனமுற்று நோயாகப் படுக்கையில் இருக்கும் அன்னம் என்ற பெண் கதாபாத்திரமே இங்கு முக்கியப் படுத்தப்படுகின்றாள். அவருக்காகவே தர்மு திருமணம் முடித்துக் கொள்ளாமல் இருக்கின்றாள். தன் மூத்த சகோதரன் இருந்தும் அன்னத்தைக் கவனிக்க மாட்டான் என்பதை அவள் சீதா மாமியிடம் கூறுகிறாள். தனியாகச் செயல்பட இயலாதவர்களை மனிதா பிமானத்தின் பெயரால் தன்னுடன் சேர்த்துக்கொள்ளும் ஒரு கதாபாத் திரத்தை ஆசிரியர் எடுத்துக்காட்டு கின்றார். மாணவர்கள் திரைக்கதை என்ற பகுதியாக மட்டுமன்றி இப்பகுதியில் வெளிப்படும் மனிதாபிமானச் சிந்தனைளையும் மனதில் கொண்டு வாசிக்க ஆசிரியர் உதவ வேண்டும்.

**நாடகம்**

- கலைஞர்களின் நேரடி பங்களிப்பு
- நடிகர்கள் வசனம் படித்து ஒப்புவிக்கும் திறன் தேவை
- பிழை நேராமல் கருத்துடன் இருக்க வேண்டும்
- மேடையேறியதும் கதாப்பாத்திரமாகவே மாறுதல்
- வெட்டல் ஒட்டல் இல்லை

ஆசிரியர் விளக்கம் அளித்தல்.
திரைக்கதை நாடகம் என்பது பற்றிய குறிப்பு எழுதுகிறார்கள். ஆசிரியர் அதனை மதிப்பிடு கிறார். குறிப்பில் எல்லாக் கருத்து களும் அடங்கியுள்ளன என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

**திரைப்படம்**

- நிழல்படக் காட்சி வசதிக்கேற்பப் படப்பிடிப்பு
- வாயசைப்பும் செயல்களும் போதும். குரலைப் பின்னர் பதிவு செய்யலாம்
- பிழை நேர்ந்தால் திருப்பி எடுக்கலாம்
- மீண்டும் மீண்டும் எடுக்கலாம் (Re-make) என்பதால் சிக்கல் இல்லை
- வெட்டல், ஒட்டல் உண்டு

## கலந்துரையாடல்

குறும்படம் திரையிடுதல்

(பாரதி, வ.உ.சி மற்றும் இலக்கிய வாதிகள் பற்றியவை)

திரைப்படம் பார்த்தல், ரசித்தல், விமர்சனக் குறிப்பு எழுதல், திரைப்படம் - நாடக வேறுபாடு அறிதல்

பாடப்பகுதியில் பச்சைவயல் படக்காட்சியை விமர்சனம் செய்தல்; விமர்சனக் குறிப்பு எழுதல்

- திரைக்கதை
- வசனம்
- பாடல் / இசையமைப்பு
- ஒலி, ஒளி
- மேம்படுத்தல் (Editing)
- நாடகம் - திரைப்படம் வேறுபாடுகளைப் பட்டியலிடுதல்

பாலுமகேந்திராவுடன் சில நொடிகள் என்னும் பாடப்பகுதியை வாசிக்கிறார்கள்

## பாடவிளக்கம்

பாலு மகேந்திரா என்ற தமிழ்த்திரைப்பட இயக்குநரிடம் அஜயன் பாலா, தளவாய் சுந்தரம் ஆகியோர் நடத்திய நேர்காணல் பாடப்பகுதியாக அமைந்துள்ளது. அம்புலிமாமாப் புத்தகம் படிப்பதிலிருந்து அவருக்கு ஏற்பட்ட சினிமா ஆர்வத்தை எடுத்துரைக்கிறார். சினிமா மீதான ஆர்வம் அவர் பிடித்த அமெரிக்கன் ஜெஸ்விட்ஸ் நடத்திய கத்தோலிக்கப் பள்ளிக் கூடத்திலிருந்து தொடங்கியதாகக் கூறுகிறார். அதற்குக் காரணமாக இருந்தவர். பாதர் கேபிரியல் என்பவர். அவர்தான் உலகின் தலைசிறந்த திரைப்படங்களைப் பார்ப்பதற்கான வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்தவர். உலகசினிமாவையும் உருவாக்கிக் கொடுத்தவர். உலக சினிமாவையும் தமிழ் சினிமாவையும் ஒருமித்துப் பார்த்து இரண்டிற்குமிடையேயுள்ள முரண்பாடுகளை உணரத் தொடங்கினார். கல்லூரிப் படிப்பைத் தொடர்ந்து கொழும்புக்கு சென்றவர். சர்வே டிபார்ட்மென்டில் ஏரியல் புகைப்படக்காரராக வேலை செய்தார். கொழும்பிலும் திரைப்படச் சங்கத்தைத் தொடங்கி நடத்தினார்.

தனது பதின்மூன்றாவது பிறந்த தினத்தில் தனது தகப்பனார் பிறந்தநாள் பரிசாகக் கொடுத்த காமிராவில் புகைப்படங்கள் எடுக்கத் தொடங்கியதாகக் கூறுகிறார். கொழும்பிலிருந்து நேராகப் பூனா திரைப்படக்கல்லூரியில் சேர்ந்து முறையாகக் கற்கத்தொடங்கினார். பெரிய பெரிய சினிமாக்களை உருவாக்குவது பற்றிக்கனவு காண்பதே கல்லூரி வாழ்க்கையாக அமைந்தது. சினிமாக்கல்லூரி வாழ்க்கை பாதித்த ஒளிப்பதிவாளர்கள், விரும்பிப் பார்த்த தமிழ்ப் படங்கள் அவரது முதல் படம் போன்றவைப் பற்றித் தொடர்ந்து அவரது நேர்காணலில் சொல்லிக் கொண்டே போகிறார். பாடத்தை வாசித்தபின் எல்லாச் செய்திகளையும் கலந்துரையாடலுக்கு உட்படுத்த வேண்டும்.

**திரையிடுதல்**

தங்கமீன்கள் திரைபடத்தைக் கவனமாக பார்த்தல்.

மாணவர்கள் பாடப்பகுதியை வாசிக்கிறார்கள்.

**பாடவிளக்கம்**

**பரிசுத்த அன்பில் நீந்தும் மீன்கள்**

நல்லாசிரியர் விருது பெற்ற தகப்பனுக்குப் பிறந்த தலை மகன் கல்யாணி. முறையாகக் கல்வி கற்காத அவன் சரியான வயதில் காதல் வயப்பட்டு விடு கிறான். இளவயதிலேயே மண மும் முடித்துவிடுகிறான். வாழ்க் கை நடத்துவதற்குத் தேவை யான வருமானம் இல்லை என்ற சூழலில் அப்பனோடு ஒரே வீட்டில் குடித்தனம் நடத்து கிறான். தந்தையிடம் போதிய வருமான மும் தேவையான அளவு சொத்தும் உள்ளன. தங்கை மென்பொருள் துறையில் வேலை பார்த்துக் கைநிறைய சம்பாதிக்கிறாள். ஆனால் கல்யாணியோ தன் மகளின் படிப்புச் செலவுக்குப் பணமின்றித் திணறுகிறான். கல்விக்காக ஏங்கும் மகளைப் படிக்க வைக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறான். கதையின் இறுதியில் நல்லாசிரியர் விருது பெற்று நன்கு சம்பாதித்த தந்தையை விடப் படிப்பைப் பாதியில் துறந்த, போதுமான அளவு சம்பாதிக்காத தந்தையான கல்யாணி நல்ல தந்தை என்னும் பெயரை எளிதில் பெற்று விடுகிறான். காரணம் அவனது தூய அன்பு தான்.

**விமர்சனக் குறிப்பு**

- திரைக்கதை - புரியும்படியாகவும் ரசிக்கும் படியாகவும் உளளது
- குழப்பமான கதையமைப்பு
- வசனம் - வழவழகொழகொழ/ விறுவிறுப்பு/சுருக்க விளக்கம்
- பாடல் இசை : கருத்துடைய படத்தோடு பொருந்திய பாடல்/ தொடர்பில்லாப் படக்காட்சி/பழைய பாடலை நினைவூட்டுகிறது
- இனிய பின்னணி இசை/பாடல் வரிகளைப் புரிந்துகொள்ள இயலாதவாறு இசை முழக்கம்/காட்சிக்கேற்ற இசையும் பாடலும்
- ஒலிப்பதிவு : அன்றாட நிகழ்வுகளில் இயல்பாக ஒலிக்கும் ஒலிகளின் பதிவு/செவிப்பறையைக் கிழிக்கும் ஒலி/ பொருத்தமில்லாத ஒலி

ஒளிப்பதிவு : இயல்பானது / மிகையான ஒளி

மேம்படுத்தல் – தாழ்வில்லை / சுமார் / நன்று

விமர்சனக் குறிப்புகளை மணவர்கள் மதிப்பிடுதல்

ஆசிரியர் மதிப்பிடுதல்

முடிவுக்கு வருதல்

**கலந்துரையாடல்**

கலந்துரையாடலில் இடம் பெற வேண்டிய கருத்துகள்

- திரைக்கதை
- வசனம்
- பாடல்
- காட்சி அமைப்பு
- ஒலி, ஒளி அமைப்பு
- இயக்கம்

கண்டுகளித்த ஏதேனும் ஒரு சமூகப் படத்தைப் பற்றி விமர்சனம் எழுதல்

வகுப்பறையில் பார்த்த தங்கமீன்கள் படத்தையும் முன்பு கண்டுகளித்த படத்தையும் ஒப்பீடு செய்தல்

- திரைக்கதை – பிசிறில்லை; கச்சிதம்
- வசனம் – பாத்திரங்களுக்கேற்ற வண்ணம் அமைந்துள்ளன
- பாடல் – தவிர்த்திருக்கலாம்

- காட்சி அமைப்பு- அருமை, இயல்பானவை
- ஒலி, ஒளி – கனகச்சிதம்
- இயக்கம் – இயக்குநரின் உழைப்பு ஒவ்வொரு நிமிட ஓட்டத்திலும் தெரிகிறது. காண்பார் நெஞ்சில் பதியும் வண்ணம் காட்சிகளை அமைத்து நெஞ்சுருக வைக்கிறார்

## ஒப்பீடு

- தங்கமீன்கள் - வழக்கு எண் 8 / 16
- இரண்டு கலைப்படங்கள் (Art Fim)
- தங்கமீன்கள் - அப்பா - மகள் பாசப்பிணைப்பில் இயங்குகிறது. இரண்டு படமும் இருவேறு தளத்தில் இயங்கியபோதும் சமூகப் பிரச்சினைகளைத் தான் முன்வைக்கின்றன.
- வழக்கு எண் 8 / 16 விடலைப் பருவ விபரீத உணர்வுகளை வெளிப்படுத்துவதும், சமூக அவலமான உண்மைகளைப் பகிரங்கப்படுத்துவதும் காலத்திற்கேற்ற படமாக எடுத்துக் காட்டுகிறது.
- தங்கமீன்களில் வரும் பாச உணர்வுகள் பழைய கருத்தாக்கமாக இருந்தாலும் காலந்தோறும் இருக்கவேண்டிய ஒன்று என்பதை உணர்த்துகிறது.
- வசனம் - இயல்பானவை அதேவேளை மினுக்கி எடுத்த சிற்பம் போலக் கனகச்சிதமானவை.
- பாடல் - பொருத்தமான இடத்தில் பொருந்தும் வகையில் அமைக்கப்பட்டிருப்பது நன்று.
- காட்சி அமைப்பு –மிக இயல்பானவை. மிகையம்சம் சிறிதுமில்லை. குன்றாத விறுவிறுப்புடன் ஆவலைத் தூண்டும் வகையில் உள்ளன.
- ஒலி, ஒளி - இயல்பை மீறாதவை. காட்சிகள் சுழன்று வரும்போது ஒளிப்பதிவாளரின் திறன் ஒவ்வொரு ஃபிரேமிலும் தெரிகிறது.

இயக்க – இயக்குநர் பாலாஜி சக்திவேல் இச்சமூகத்திற்கு தந்திருக்கும் மிகச் சிறந்த படம். நிஜத்தை நேரில் காண்பது போலப் படம் பறக்கிறது.

இரு படக்கதைகளும் திரைக்கதை அமைப்பில் டெம்போ குறையாத வகையில் பார்வையாளரை இருக்கையின் விளிம்புக்கே இழுத்து வருகின்றன.

இரு படங்களும் இயக்குநர்களின் கடும் முயற்சியைக் காட்டுவதுடன் வெறும்பொழுது போக்கு படங்களிடையே புகுந்து வெற்றி காண வேண்டும் என்ற உள்ளொளியும் வெறியும் கொண்டவர்கள் என்பதை எடுத்துரைக்கின்றன.

## திரைக்கதை எழுதல்

**திரைக்கதை எழுதுவது எப்படி?**

- கதையை முடிவு செய்தல்
- காட்சிப்படுத்தலுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் எழுதுதல்
- இயல்பான வசனம்
- இணைத்துக்கொள்வதற்கு ஏற்றவகையில் கதைத் துளிகளை அமைத்தல்.

மாணவர்கள் கதைப்பகுதியை வாசித்துக் கதைக்கு ஏற்றவாறு திரைக்கதை எழுத வேண்டும்.

## குறும்படம் தயாரித்தல்

- கதையைத் தீர்மானித்தல்
- திரைக்கதை தயார் செய்தல்
- கதைக்கேற்ற கலைஞர்களைத் தேர்வு செய்தல்
- காட்சிக்குரிய இடங்களைத் தீர்மானித்தல்
- திரைக்கதாசிரியர், இயக்குநர் மற்றும் ஒலி - ஒளிப் பதிவாளருடன் கலந்துரையாடி வசனங்களை எழுதல்
- டிஜிட்டல் காமெராவில் படத்தை எடுத்தல். படம் நன்றாக வந்துள்ளதெனில் சின்னத்திரை யிலிருந்து பெரிய திரைக்கேற்றவாறு மாற்றிக்கொள்ளலாமே.
- மேம்படுத்தல் Editing.

## ஆசிரியர் மதிப்பீடு

குறும்படம் தயாரித்தலை ஆசிரியர் மதிப்பிடும்போது கீழ்வரும் குறிப்புகளைக் கருத்திற்கொள்ள வேண்டும்.

- கதை
- வசனம்
- மொழிநடை
- தலைப்பு
- இசை
- பாடல்
- பின்னணி
- பாத்திர அமைப்பு

## கற்றல் அடைவு

திரைக்கதை எழுதி குறும்படம் தயாரித்தல்.

ஆசிரியர் தொடர்மதிப்பீட்டிற்கு உட்படுத்த வேண்டிய செயல்பாடுகள்

- பட்டிமன்றம்
- பட்டிமன்ற ஏற்பாடுகள்
- தலைமைப் பண்பு
- பொறுப்பேற்கும் பண்பு
- நடுவர் பணி
- முகநூல் உருவாக்கம்
- திரைக்கதை வசனம்
- குறும்படத் தயாரிப்பு
- கதையை வடிவமாற்றம் செய்தல்
- திரைப்பட விர்சனம்
- திரைப்படம் பார்த்தல்.

படைப்புத் தொகுப்பில் சேர்க்க வேண்டியவை

- கட்டுரைகள்
- குறிப்புகள்
- திரைப்பட விமர்சனம்
- திரை வசனம்
- பட்டிமன்றக் குறிப்புகள்
- கதைகள்

மேலும் ஆசிரியிர் வகுப்பறையில் செயல்பாடுகளை நடத்தும் வேறும் மாணவன் தொகுத்த பிற மொழி வெளியீட்டு வடிவங்கள், பயிச்சித்தாள் போன்றவற்றையும் படைப்புத் தொகுப்பில் சேர்த்துக் கொள்ளலாம்.

## பருவ மதிப்பீட்டிற்கானவை

இணையம்/மின் ஊடகங்கள் குறித்த கட்டுரைகள்/குறிப்புகள்/ கட்டுரைகள்
பட்டிமன்றக் குறிப்புகள்
சொற்பொழிவு/சிறப்புரைக்கான உரைகள்
கருத்தரங்கக்கட்டுரைகள்.

## வினாக்கள்

மின் ஊடகங்களின் பயன்பாடு குறித்து கட்டுரை எழுதுகிறார்கள்.

1. கல்வியில் தகவல் தொழில் நுட்பத்தின் பங்கு என்ற தலைப்பில் அறிவியல் கண்காட்சி தினத்தில் உரையாற்றுவதற்கான சொற்பொழிவு உரை தயாரிக்க.
2. மின் ஊடகங்களின் தாக்கம் இளம்தலைமுறையினரிடையே இன்று அதிகமாகியுள்ளன. இதனால் விளைவது நன்மையே தீமையே என்ற தலைப்பில் நடைபெறும் பட்டிமன்றத்திற்கான குறிப்பு எழுதுக.
3. கேரள அரசின் சார்பில் நடத்தும் அறிவியல் தினா விழாவில் பரிசளிக்கும் பொருட்டு நடைபெறும் கட்டுரைப் போட்டியில் பங்கேற்க இணையப் பயன்பாடும் இளம் தலைமுறையினரும் என்ற தலைப்பில் கட்டுரை தயாரிக்க.

## துணை நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | வலைப்பூக்கள் | - | உதயசூரியன் |
| 2. | தகவல் தொழில் நுட்பம் | - | சு. அபிராமி<br>தமிழ்ப்புத்தகாலயம்,<br>G- 3 / 8, மாசிலாமணித் தெரு,<br>பாண்டிபஜார், சென்னை. |
| 3. | பச்சைவயல் | - | மகரிஷி |
| 4. | தகவல் தொழில் நுட்பம் | - | டாக்டர். ஸ்ரீகுமார் |

வளப்பகுதி

**பாலுமகேந்திரா**

இயற்பெயர் : பெஞ்சமின் பாலநாதன் மகேந்திரா

பிறந்த ஊர் : யாழ்ப்பாணம், இலங்கை

இவர் ஒளிப்பதிவு செய்த முதல் படம் நெல்லூர் எனும் மலையாளத்திரைப்படம் சிறந்த ஒளிப்பதிவாளர்க்கான கேரள அரசின் விருதைப் பெற்றது.

மலையாளத்தில் உள்க்கடல், ப்ரயாணம், ராகம், சட்டக்காரி, சீனவல உட்பட பல படங்களுக்கு ஒளிப்பதிவாளராகப் பணியாற்றியவர். ஓளங்ஙள் (மலையாளம்), கோகிலா (கன்னடம்), நிரீக்ஷனா (தெலுங்கு), ஸத்மா (இந்தி) எனப் பல்வேறு மொழிகளில் இவரது இலக்கியப் படங்கள் பரிசுகளையும், பரிசு அட்டைகளையும் பெற்றன. தமிழில் வீடு, அழியாதக் கோலங்கள், மூன்றாம் பிறை, மூடுபனி, நீங்கள் கேட்டவை, சதிலீலாவதி, சந்தியா ராகம், மறுபடியும் உட்பட பல படங்களை இயக்கித் தமிழுக்குப் பெருமைச் சேர்த்தார். கடைசியாக இவர் இயக்கத்தில் வெளிவந்த படங்கள் தலைமுறைகள். அதில் அவரே முக்கியப் பாத்திரத்தில் நடித்தார். அப்படத்தில் முதியவராக வரும் அவர் இறந்து போகிறார். இப்படம் வெளிவந்த சில வாரங்களுக்குள் உண்மையாகவே அவர் இறந்து போனார்.

மறைந்த நாள் : 13.02.2014

அவர் இயக்கிய, ஒளிப்பதிவு செய்த திரைப்படங்களும் அவர் 2013இல் நிறுவிய பாலுமகேந்திரா சினிமா பட்டறை எனும் திரைப்படக்கல்லூரியும் அவர் புகழை என்றென்றும் பாடிக் கொண்டே இருக்கும்.

**திரைப்படச் செய்திக் குறிப்புகள்**

அசையும் திரைப்படத்தை முதன்முதலில் உருவாக்கியவர்கள் பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த லூமியர் சகோதரர்கள். அவர்கள் தயாரித்த புகைவண்டி ஒன்று வந்து நிற்பது, கடலில் சிலர் குளிப்பது, கட்டிடத்தை இடிப்பது போன்றத் துண்டுப்படங்களை 1897இல் மும்பையிலும் காட்டி வியக்க வைத்தார்.

**பேசாப்படங்கள்** (MOVIES)

அதனைத் தொடர்ந்து இந்தியாவில் முதல் திரைப்படம் 1913இல் படத்தின் பெயர் ராஜஹரிச்சந்திரா. இதனைத் தயாரித்தவர் தாதாசாகேப் பால்கே என்பவர். இந்தியத் திரைப்படத்தந்தை இவரே. இப்படம் ஒரு பேசாப்படம் **(SILENT MOVIE)** என்பது குறிப்பிடத்தக்கது.

- தமிழில் தயாரிக்கப்பட்ட முதல் திரைப்படம் கீசகவதம். 1916இல் வெளிவந்தது. இது பேசாப்படமே. இதைத் தயாரித்தவர் நடராஜ முதலியார்.
- மலையாளத்திரையுலகின் முதல் திரைப்படம் விகதகுமாரன். 1930இல் வெளிவந்தது. இதனை எழுதித் தயாரித்து இயக்கி நாயகனாக நடித்தவர் ஜே.சி. டானியல். கன்னியாகுமரி மாவட்டம் அகத்தீசுவரத்தைச் சேர்ந்தவர். மலையாளத்திரைப்படத் தந்தை எனப் போற்றப்படுகிறார். கேரள அரசு அளிக்கும் உயர்ந்த திரைப்பட விருதுக்கு ஜே.சி.டானியல் என்று

பெயரிடப்பட்டுள்ளது.

**பேசும்படங்கள் (TALKIES)**

- இந்தியாவில் திரையிடப்பட்ட முதல் பேசும் படம் மெலடி ஆஃப் லவ். திரையிட்ட ஆண்டு 1929.
- இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் பேசும் படம் ஆலம் ஆரா. 1931 இல் வெளிவந்தது. இது ஓர் இந்தி மொழிப்படம்.
- தமிழில் தயாரிக்கப்பட்ட முதல் பேசும் படம் காளிதாஸ். 1931இல் வெளிவந்தது.
- மலையாளத்தின் முதல் பேசும் படம் பாலன். இதனை தயாரித்தவர் சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் என்ற படநிலையத்தின் அதிபர் டி.ஆர்.சுந்தரம் என்ற தமிழர்.
- தமிழில் முதல் பேசும் படக் கதாநாயகி டி.பி. ராஜலட்சுமி, 1931), இவரே தமிழில் முதல் பெண் படத் தயாரிப்பாளர். படத்தின் பெயர் மிஸ்.கமலா. 1936இல் வெளிவந்த இப்படத்தின் இயக்குநரும் அவரே. தமிழில் முதன் பெண் இயக்குநர் என்ற பெருமையும் பெற்றார்.